பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | மார்கழி 14 | வெள்ளிக்கிழமை 29.12.2017 | கதிர் 54

## என் வாளில் யார் சிக்குவர் என்பது எனக்குத் தெரியாது

ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, டிசெ .29
பகவத் கீதையில் கூறப்படு வது போல என்னுடைய வாளுக்கு யார் வெட்டுப்படுவார்கள் என்று என்னால் கூறமுடியா

பக்கம் 18

# கட்சிகள் புகுந்தமையால் உள்ளூராட்சியில் சிக்கல்

## இந்தத் தேர்தலில் எந்தக் கட்சியுடனும் வேட்பாளர்களுடனும் தம்மை இழுக்க வேண்டாம் என்கிறார் முதலமைச்சர் விக்கி



யாழ்ப்பாணம், டிசெம்பர் 29

**"கூட்டுறவுச் சங்கங்களுக்குள் அரசியல்வாதிகளும் அரசியலும் புகுந்து அவற்றைச் சின்னாபின்னமாக்கின. அதேபோன்றே உள்ளூ ராட்சிக்குள் அரசியல் கட்சிகள் புகுந்தமையால் பெரும் சிக்கல்கள் எழுந்துள்ளன."**

**இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன்.**

இந்தத்தேர்தலில்எந்தக்கட்சியுடனும் எந்த வேட்பாளர்களுடனும் தன்னை இழுத்துநன்மைபெறஎத்தனிக்கவேண டாம் என்றும் அவர் கோரியுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் அவர் நேற்று மாலை வெளியிட்ட அறிக்கையிலேயே இத னைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும்

பக்கம் 03

## வடக்குத் தமிழ் அரசியல்வாதிகளுக்கு சிங்களப் பொலிஸார் மீதே நம்பிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.29
"வடக்கில்உள்ளதமிழ் அரசியல்வாதிகளுக்கு சிங்களப் பொலிஸாரே மெய்ப் பாதுகாவலர் களாக வழங்கப்பட்டுள்ள னர். அவர்களையேவடக்கு அரசியல்வாதிகள் நம்பு கின்றனர்."
-இவ்வாறு தெரிவித்தி ருக்கின்றார்வடக்குமாகாண

பக்கம் 18

அரசமைப்பு வழிகாட்டல் குழுவில் இருந்து

## விலகினார் விஜேதாஸ



கொழும்பு, டிசெ. 29
அரசமைப்புச் சபையில் இருந்து விலகிக் கொள்கிறார் என, முன்னாள் நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

பக்கம் 18

## மஹிந்த தரப்புக்கு பெரும் தலையிடி

ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜன.2ஆம் திகதி கையளிப்பு

கொழும்பு, டிசெ. 29
பாரிய ஊழல் மோச டிகள்தொடர்பானஜனாதி பதி ஆணைக்குழுவின் அறிக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி ஜனாதிபதி மைத்தி

பக்கம் 18

## 85 குடும்பங்களின் 133 ஏக்கர் கேப்பாபிலவில் நேற்று விடுவிப்பு



முல்லைத்தீவு, டிசெ. 29
கேப்பாபிலவில் படையி னரால்அபகரிக்கப்பட்டிருந்த காணிகளில் 85 குடும்பங்க ளுக்குச்சொந்தமான133.4 ஏக்கரை நேற்று மக்கள் முன்னிலையில் முல்லைத் தீவு மாவட்ட செயலரிடம் ஒப்படைத்தது இராணுவம்.
இந்தக் கையளிப்பு

பக்கம் 18

## இந்திய மீனவர்கள் 61 பேர் விடுதலை

யாழ்ப்பாணம், டிசெ. 29
கைதாகித் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந் திய மீனவர்களில் 61 பேர் ஊர்காவற்றுறை மற்றும் மன்னார் நீதிமன்றங்க ளால் நேற்று விடுவிக்கப் பட்டனர்.

பக்கம் 18

நீதிமன்றத்தின் பிடியாணையால்

## யாழ். குடும்பத் தலைவர் தமிழகத்தில் தலைமறைவு

சென்னை, டிசெ. 29
தமிழகம் மண்டபம் அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தயாழ்ப் பாணத்தைச் சேர்ந்த குடும் பத் தலைவர் தலை மறைவாகியுள்ளார் எனத்

பக்கம் 18

## கேப்பாபிலவில் குழப்பம்



கேப்பாபிலவில் நேற்று ஒரு தொகுதி காணிகள் இராணு வத் தால்விடுவிக்கப்பட் டன.
விடுவிக்கப்படாத காணிகளுக்குப் பதி லாக மாற்றுக் காணி களை மக்கள் கோரு

பக்கம் 18

கூட்டணிக்குள்ளும்

## 'லடாய்'!

யாழ்ப்பாணம், டிசெ. 29
தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரி யன் சின்னத்தில் உள்ளூ ராட்சித் தேர்தலில் போட்டி யிடும் ஆனந்தசங்கரி

பக்கம் 18

## கூட்டமைப்பு பலவீனமானால் அது தமிழருக்குப் பின்னடைவு

கூறுகின்றார் சித்தார்த்தன் எம்.பி.




முல்லைத்தீவு, டிசெ. 29
உள்ளூராட்சித் தேர்தலில் கூட்ட மைப்பு பலவீனப்படுத் தப்பட்டால் அது தமிழ் மக்களின் பிரச்சினைகளில் பின் னடைவை ஏற்படுத்தும் காரணியாக அமைந்து விடும்.
- இவ்வாறு

பக்கம் 18

## தாங்கள் கட்டிய 29 வீடுகளையும் மக்களுக்கு வழங்கிய இராணுவம்




முல்லைத்தீவு, டிசெ. 29
கேப்பாபிலவில் நேற்று விடுவிக்கப்பட்ட பகுதிக்குள் படையினரால் ஏற்கனவே

பக்கம் 18

## யாழ். மாணவர்கள் மூவர் தேசிய நிலையில் சாதனை!

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில்


(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், டிசெ .29
2017 ஆம் ஆண்டு ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகி யுள்ள நிலையில், யாழ். மாவட்ட மாண வர்கள் மூவர்

பக்கம் 18

## தேர்தல் சட்டமீறல்; முறைப்பாடுகள் 42

கொழும்பு, டிசெ. 29
உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒழுங்குவிதி முறைகளை மீறியமை தொடர்பில் நேற்று வரை 42 முறைப்பாடுகள் கிடைத் துள்ளன எனவும், இவற்றுடன் தொடர்பு டைய 34 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள் ளனர் எனவும் பொலி ஸார் தெரிவித்தனர்.
அந்தவகையில், தேர் தல் ஒழுக்க விதிமுறை

பக்கம் 18

# பாடசாலை சுற்றாடல் பகுதியில் டெங்கு; முக்கியஸ்தர்கள் பொறுப்புக்கூற வேண்டும்!

கொழும்பு, டிசெ. 29

நாடு முழுவதும் பரவிவரும் டெங்கு நோயிலிருந்து பாடசாலை மாணவர்களைப் பாதுகாப்பதற்காக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் வழிகாட்டலுக்கு அமைவாக டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

2018 ஆம் ஆண்டின் முதலாவது பாடசாலை தவணை ஆரம்பிப்பதற்கு முன்னதாக , அதாவது டிசெம்பர் 30 ஆம், 31 ஆம் திகதிகளில் நாடுதழுவிய ரீதியில் பாடசாலைகளில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.





தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்களுக்கு அமைவாக அனைத்து பாடசாலைகளிலும் டெங்கு நுளம்புகள் அற்ற வலயங்களாக முன்னெடுப்பதற்கு நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டத்தை வெற்றிபெற செய்ய வலய கல்விப் பணிப்பாளர்கள், கோட்ட கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஆலோசகர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய அதிகாரிகள் பங்களிப்பு வழங்க வேண்டும்.

இதே போன்று வலய மட்டத்தில் இது தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை ஒன்று கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி வலியுறுத்தியுள்ளார்.

மேலும், பாடசாலை வளவை துப்புரவு செய்ய பெற்றோர், முப்படையினர், பொலிஸார் ,சிவில் பாதுகாப்பு படையணி மற்றும் பிரதேச சுகாதார வைத்தியர்களின் பங்களிப்பைப் பெற்று கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அனைத்து பாடசாலை முக்கியஸ்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக வாரத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுகிழமை களிலும் பாடசாலை சுற்றாடலை சுத்தம் செய்யும் பணியை முன்னெடுப்பதற்காக பாடசாலை முக்கியஸ்தர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே போன்று ஏதேனும் பாடசாலை சுற்றாடல் பகுதியில் டெங்கு நுளம்பு பரவும் நடைமுறையின் கீழ் தண்டப்பணம் விதிக்கப்பட்டால் அதற்கு பாடசாலை முக்கியஸ்தர் பொறுப்பு கூற வேண்டும் என்றும் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## கூட்டு எதிர்க்கட்சி ஆதரவாளர் ஜனாதிபதியுடன் இணைவு!



கொழும்பு, டிசெ. 29

கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்பட்டு வந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மகாஜன எக்சத் பெரமுனவின் உப தலைவருமான சோமவீர சந்திரசிறி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கியுள்ளார்.

நேற்றுக் காலை ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்திற்கு வருகை தந்த அவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்குத் தமது முழுமையான ஆதரவை வழங்குவதாகவும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் வெற்றிக்கு உழைப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## வடமாகாண அணி சாதனை!

கொழும்பு, டிசெ. 29

தேசிய இளைஞர் படையணியின் இளைஞர் யுவதிகளின் விளையாட்டு ஆற்றலை பரீட்சிப்பதற்காக முதலாவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய மாபெரும் விளையாட்டுப் போட்டியில் ஆகக்கூடிய வெற்றிகளை வட மாகாண அணி பெற்றுள்ளது.



தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்ட இந்த விளையாட்டு போட்டி சமீபத்தில் திவலப்பிட்டிய தேசிய இளைஞர் படையணி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

கிரிக்கட் , வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கபடி, உதைபந்தாட்டம்,எல்லே உள்ளிட்ட 6 போட்டிகளைக் கொண்டதாக இது அமைந்தது.

இதன்போது வடமாகாண அணியில் ஆண்களின் பிரிவு கிரிக்கெட், உதைப்பந்தாட்டத்திலும் பெண்களின் பிரிவு கரபந்தாட்டத்திலும் வெற்றிகளை பெற்றன.

இதன்போது வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய குழுவினர் வெற்றிபெற்றுள்ளனர். (சு)

## இன்றிரவு பஞ்சரத்தின கீர்த்தனை கச்சேரி

வண்ணை ஸ்ரீ வேங்கட வரதராஜப் பெருமான் தேவஸ்தானத்தில் ஸ்ரீ வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு ஈழத்தின் பிரபல இக்கலைஞர்கள் சங்கமிக்கும் பஞ்சரத்தின் கீர்த்தனை கச்சேரி இடம்பெறும். என்று அறிவிக்கப்பட்டுள்ளது


## ஸ்ரீ.ல.சு. கட்சியின் அமைப்பாளராக மஹிந்த!



அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளராக கலாநிதி மஹிந்த பாதேகம நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனம் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

## இலங்கையின் பிரபல பாடகி காயமடைந்தார் வீதி விபத்தில்



கொழும்பு, டிசெ. 29

இலங்கையின் பிரபல பொப் இசைப் பாடகி ஜின்ஜர் விபத்தில் காயமடைந்துள்ளார்.

தெனியாய பிரதேசத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக பயணித்தபோது தியதாவே பகுதியில் வைத்து அவர் பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகியது.

ஜின்ஜர் பயணித்த வாகனம் சுமார் 60 அடி பள்ளத்தில் வீழ்ந்ததாலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த வாகனத்தில் பயணம் செய்த ஜின்ஜர் உள்ளிட்ட நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

பாடகி ஜின்ஜர் தெனியாக ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மாத்தறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சாரதி தூக்கமடைந்தமையாலேயே இந்த விபத்து இடம்பெற்றது எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

ஜின்ஜரின் 7 வயதான மகனும் மற்றுமொரு உறவு முறை மகன் இருவரும் அவர்கள் நால்வரும் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது சாரதியும் ஜின்ஜரும் வாகனத்தில் பயணம் செய்துள்ளனர்.

## எமக்கும் விசேட அதிரடிப்படை பாதுகாப்பு வழங்க வேண்டும்!



ஹக்கீம்

திகாம்பரம்



கொழும்பு, டிசெ. 29

தமக்கும் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என அமைச்சர்களான பழனி திகாம்பரம் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சர் மனோ கணேசனுக்கு விசேட அதிரடிப் படை பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், இவர்களும் இந்தக் கோரிக்கை விடுத்துள்ளனர்

அதிமுக்கிய பிரமுகளுக்கு வழங்கப்படும் விசேட அதிரடிப்படை பாதுகாப்பை மனோ கணேசனுக்கு வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.

கொழும்பு மாநகரசபை தேர்தலில் சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு திரட்டும் நோக்கில் இவ்வாறு பாதுகாப்பு வழங்கப்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் மனோ கணேசனுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்களைப் போன்றே தமக்கும் அச்சுறுத்தல்கள் காணப்படுவதாகத் தெரிவித்து திகாம்பரம் மற்றும் ஹக்கீம் ஆகியோர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# யாழ். இந்துவில் 21 பேருக்கு 3ஏ

யாழ்ப்பாணம், டிசெ.29

ஜி.சி.ஈ. உயர்தரப் பெறுபேறுகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 21 மாணவர்கள் 3 ஏ சித்தி பெற்றுள்ளனர்.

கணிதப் பிரிவில் 10 பேரும், உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் நால்வரும், வர்த்தகப் பிரிவில் 7 பேரும் இவ்வாறு சித்தியடைந்துள்ளனர். (ஐ)

# சிற்றங்காடிக் கடைத் தொகுதியில் பேய் உலாவுவதாகக் கட்டுக் கதை

## வியாபாரிகளின் வயிற்றிலடிக்கவே ஒரு சிலர் இப்படி விசமச் செயற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.29

யாழ்ப்பாணம் நகர் சிற்றங்காடியில் பேய், பிசாசுகள் நடமாடித் திரிகின்றன எனக் கூறப்படுவது உண்மைக்கு மாறானது. எமது வியாபாரத்துக்கு எதிரானவர்களால் கட்டிவிடப்பட்ட கட்டுக்கதை இது.

இவ்வாறு யாழ்.நகர சிற்றங்காடி வியாபாரிகள் சிலர் தெரிவித்தனர்.

யாழ்.மத்திய பஸ் நிலையத்துக்கு அருகாமையில் யாழ்.மாநகர சபையால் புதிதாக அமைத்துக் கொடுக்கப்பட்ட சிற்றங்காடிக் கடைத் தொகுதியில் அமானுஷ்ய சக்திகளின் நடமாட்டம் உள்ளதாகச் செய்தி வெளியாகியிருந்தது.

இது தொடர்பில் சிற்றங்காடி வியாபாரிகள் தெரிவித்தவை வருமாறு:

சிற்றங்காடிக் கடைத் தொகுதியில் 76 கடைகள் உள்ளன. அதன் மூலம் 125 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இரண்டு வியாபாரிகள் முன்னர் உயிரிழந்தனர்.

அவர்கள் இருவரும் நீண்ட காலமாக நோய் வாய்ப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்த நிலையில்தான் உயிரிழந்தனர். ஒருவர் சிறுநீரகம் செயலிழந்து இருந்தமையால் நோய் வாய்ப்பட்டு இறந்தார். மற்றவர் மாரடைப்புக் காரணமாக உயிரிழந்தார். அவர்கள் பேய் பிசாசு அடித்து உயிரிழக்கவில்லை. நோய் வாய்ப்பட்டே உயிரிழந்தார்கள்.

யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளரிடம் புதிய கடைத் தொகுதிக்குச் சாந்தி செய்யவேண்டும் எனக் கோரியிருந்தது உண்மைதான். எமது இந்து மரபின் படி நாம் புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கும்போதும் புதிய கடையைத் திறக்கும்போதும் சாந்தி செய்வது வழமை. ஆனால் இந்தக் கடைகள் திறக்கும்போது அவ்வாறு சாந்தி செய்யவில்லை.

ஜூலை மாதத்தில் கடை திறந்தமையால் மனதுக்குச் சங்கடமாக இருக்கின்றது. அதனால் சாந்தி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்து தருமாறு யாழ்.மாநகர சபை ஆணையாளரைக் கோரியுள்ளோம். அவரும் அதற்குச் சம்மதித்துள்ளார்.

நாம் சாந்தி செய்யக் கோரியது எமது மதம் சார்ந்த நம்பிக்கைக்காகவே தவிர, பேய் பிசாசுக்குப் பயந்தில்லை. பேய் பிசாசு என்பதை இந்தக் காலத்தில் நம்புவது மூட நம்பிக்கை. அப்படி இங்கு எதுவுமில்லை. தொழில் போட்டி காரணமாகச் சிலர் அவ்வாறான கட்டுக்கதைகளைக் கட்டிவிட்டுள்ளனர். மக்கள் அச்சப்படாமல் எமது கடைகளுக்கு வந்து பொருள்களைக் கொள்வனவு செய்து செல்லலாம் – என்றனர். (ஐ)

## கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளவை வருமாறு:-

வடக்கு – கிழக்கில் இந்தத் தேர்தல் காலத்தில் என் பெயரை இழுத்து கட்சிகளின் சார்பிலும் தனிப்பட்ட வேட்பாளர்கள் சார்பிலும் நன்மைகளைப் பெறப் பலர் எத்தனிக்கின்றார்கள் என்று தெரிய வருகின்றது.


எதிர்வரும் வடக்கு மாகாண சபைத் தேர்தல் பற்றி நான் எந்தவித முடிவும் எடுக்காமலேயே என்னுடைய சின்னம்பற்றிஎல்லாம்கருத்துக்கள்வெளிவந்துள்ளன.

நான் ஏற்கனவே எனது கருத்துக்களை வெளியிட்டுவிட்டேன். ஊழலற்ற, நேர்மையான, தகைமையுடைய, தமது மக்களை நேசிக்கும் வேட்பாளர் களுக்கு உங்கள் வாக்குகளை அளியுங்கள் என்று கோரியுள்ளேன். உள்ளூராட்சியில் கட்சிகள் புகுந்ததால் இதுகாறும் எமது உள்ளூராட்சி மன்றங்கள் பலவிதமான சிக்கல்களை எதிர் நோக்கி வந்துள்ளன. இதே போன்றுதான் முன்னர் அரசியல்வாதிகளும் அரசியலும் புகுந்ததால் எமது கூட்டுறவுச் சங்கங்கள் சின்னாபின்னமாகின.

நான் இதுவரையில் எதிர்வரும் வடக்கு மாகாண சபைத் தேர்தல் பற்றியோ கட்சிச் சின்னம் பற்றியோ இப்போது சிந்திக்கவில்லை. எனது அரசியல் கொள்கைகள் கிட்டத்தட்ட தமிழ் மக்கள் பேரவையின் கொள்கைகளை ஒத்தது என்று ஏற்கனவே கூறியுள்ளேன்.

அத்துடன் அந்தக் கொள்கையானது 2013ஆம் ஆண்டில் வெளிவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தையும் ஒத்தது என்றும் கூறியுள்ளேன். தமிழ் மக்கள் பேரவையின் கருத்துக்களுடன் ஒத்த கருத்துடையவர்களை நான் மதிக்கின்றேன். – என்றுள்ளது. (ஐ)

# சைவ மகா சபையின் திருவெம்பாவை யாத்திரை



சைவ மக்களின் மிக முக்கிய விரதமான திருவெம்பாவை விரதத்தை முன்னிட்டு, அகில இலங்கை சைவ மகா சபையினின் வருடாந்த ஆன்மீக பாத யாத்திரை சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரம் ஆலயத்தில் இருந்து காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் வரை நடைபெற உள்ளது.

இந்தப் பாத யாத்திரை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை ஏழு மணிக்கு சம்பில் துறை சம்புநாத ஈச்சரத் தில் இருந்து ஆரம்பமாகி, சாந்தை சிதம்பரேஸ்வரர் ஆலயம், சாந்தை வீரபத்திரர் ஆலயம், பனிப்புலம் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம், சுழிபுரம் பறாளாய் முருகன் மற்றும் பிள்ளையார் ஆலயங்கள் ஊடாகவும் தொடர்ந்து சுழிபுரம் மத்தி கறுத்தனாத் தோட்டம் ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலயம், சுழிபுரம் மேற்கு ஸ்ரீ அரிஹர புத்திர ஐயனார் ஆல யம், சுழிபுரம் மேற்கு ஸ்ரீகதிர்வேலாயுத ஆலயம், சுழிபுரம் பெரியபுலோ ஞானவைரவர் ஆலயம், மூளாய் வதிரன்புலோ பிள்ளையார் மற்றும் முருகன் ஆலயங்கள் வழியாகவும், அதனைத் தொடர்ந்து வலந்தலை மடத்துக் கரை முத்துமாரி அம்பாள் ஆலயம், கிழவன் காடு முருகன் ஆலயம் ஊடாக காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தைச் சென்றடையும்.

பாதயாத்திரை நடை பெறும் போது சம்பந்தப்பட்ட வீதிகளில் வசிக்கும் மக்கள் தங்கள் வீதிகளைத் துப்புரவு செய்து, மாவிலை மற்றும் தோரணங்களால் அலங்கரித்து பாதயாத்திரையில் ஈடுபடும் யாத்திரிகர்களை வர வேற்குமாறு அகில இலங்கை சைவ மகா சபையினர் வேண்டுதல் விடுத்துள்ளனர்.

# யாழ். மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்கள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 29

வெளியாகியுள்ள உயர்தரப்பரீட்சைப்பெறுபேறுகளில் யாழ்.மாவட்டத்தில் மாவட்ட மட்டத்திலான முதலிடங்களை யாழ்ப்பாணத்தின்பிரபல பாடசாலைகளைச்சேர்ந்த 6 மாணவர்கள் பெற்றுள்ளனர்.

இதன்படி கணிதப் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவன் ஸ்ரீதரன் துவாரகன் மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். இவர் தேசிய மட்டத்திலும் முதலிடத்தை பெற்றுள்ளார்.

கலைப்பிரிவில்கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி பாலசுப்பிரமணியம் தாட்சாயினி மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும், தேசிய மட்டத்தில்51ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

வர்த்தகப் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி சாரங்கா விஜயகுமார் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் 26 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

பொறியியல் தொழிநுட்பப் பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் ஆர்.நிலக்ஷன் 2 ஏ, பி பெறுபேறைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் 8 ஆவது இடத்தையும்பெற்றுள்ளார்.

உயிரியல் பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிமாணவன்மு.வக்சலன் 3 ஏ பெறுபேறுகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் 9ஆம் இடத்தையும்பெற்றுள்ளார்.

உயிரியல்முறைமைத் தொழில்நுட்பப் பிரிவில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி கமலேஸ்வரி செந்தில்நாதன் 3 ஏ பெறுபேறுகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும்தேசிய மட்டத்தில் 3ஆம் இடத்தையும்பெற்றுள்ளார். (ஐ-7)

# மன்னார் மறைமாவட்ட புதிய ஆயரின் பணிப்பொறுப்பு ஏற்கும் நிகழ்வு நாளை

மன்னார், டிசெ.29

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ள மேதகு பிடேலிஸ் லயனல் இம்மானுவேல் பெனான்டோ ஆண்டகைக்கான வரவேற்பும் அவருடைய பணிப்பொறுப்பு ஏற்பு நிகழ்வும் நாளை சனிக்கிழமை இடம்பெறும்.

இந்த நிகழ்வு தொடர்பாக மன்னார் மறைமாவட்டத்தின் ஊடக இணைப்பாளரும் மன்னார் பத்திரிகையின் ஆசிரியருமாகிய அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் தெரிவிக்கையில்,

புதிய ஆயரின் வரவேற்பு மற்றும் பணிப்பொறுப்பு ஏற்கும் நிகழ்வுகளை சிறப்பாக மேற்கொள்ள மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மற்றும் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் குருக்களைக் கொண்ட பல உபகுழுக்கள் ஏற்படுத்தப்பட்டு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதிய ஆயரை வரவேற்பதற் அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு மன்னார் தள்ளாடிச் சந்தியில் இருந்து மோட்டார் வாகனப் பவனிஆரம்பமாகிமன்னார்பிரதான பாலத்தை வந்தடையும். மன்னார் பெரிய பாலத்தடியில் புதிய ஆயர் சம்பிரதாயபூர்வமாக வரவேற்கப்படுவார். பின்னர் அங்கிருந்து அலங்கரிக்கப்பட்ட திறந்த வாகனத்தில் நாதஸ்வரம், பாண்ட் மற்றும் இன்னிய வாத்தியம் முழங்க புதிய ஆயர் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திற்குப் பவனியாக அழைத்துச் செல்லப்படுவார்.

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தை அடைந்ததும் பேராலயத்தின் பிரதான வாயிலில் சர்வ மதத் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் தலைவர்கள் போன்றோர் புதிய ஆயருக்கு வாழ்த்துத் தெரிவிப்பர். பின்னர் புதிய ஆயர் உட்பட அனைத்து ஆயர்கள், குருக்கள் பேராலய மண்டபத்துக்குச் சென்று அங்கு திருப்பலிக்குரிய ஆடையை அணிந்துகொள்வர். பின்னர் பேராலய மண்டபத்திலிருந்து வீதி வழியாகப் பவனியாக வரும் இவர்களைத் தமிழ்ப் பண்பாட்டு முறைப்படி சிறுமியர் நடனமாடி வரவேற்று பேராலய வாசல்வரை அழைத்து வருவர்.

பேராலயவாசலில்மன்னார்மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு விக்ரர் சோசை அடிகளார் திருச்சிலுவையை வழங்க புதிய ஆயர் அதனை முத்திசெய்வார். தொடர்ந்து பேராலயப் பங்குத்தந்தை அருட்திருபெப்பிசோசைஅடிகளார்ஆசீநீர் குவளையை புதிய ஆயருக்கு வழங்கப் புதிய ஆயர் அதனைப் பெற்றுத் தானும் ஆசிநீரைப் பூசிக்கொண்டு சூழ நிற்கின்றவர்களுக்கும் அதனைத்தெளிப்பார். பின்னர்வருகைப் பாடலுடன் குருக்கள் ஆயர்கள் புடைசூழ புதிய ஆயர் பீடம் நோக்கிப் பவனியாகச் செல்வார்.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லிசுவாம்பிள்ளை ஆண்டகை திருப்பலியை ஆரம்பிப்பார். திருப்பலியின் வாழ்த்துரைக்குப் பின்னர் புதிய ஆயரின் நியமனம் தொடர்பான திருத்தந்தையின் மடல் திருத்தந்தையின் பிரதிநிதி பேராயர் மேதகு நியூஜென் வன் ரொட் ஆண்டகையால் ஆங்கிலத்தில் வாசிக்கப்படும். தொடர்ந்து அதனுடைய தமிழ் மொழி பெயர்ப்பும் வாசிக்கப்படும். திருத்தந்தையின் நியமன மடல் வாசிக்கப்பட்டவுடன் இந்தப் புதிய நியமனத்தை வரவேற்பதன் அடையாளமாக அனைவரும் கரவொலி எழுப்பி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவர். தொடர்ந்து மன்னார் மறைமாவட்டத்தைப் புதிய ஆயருக்குக் கையளிப்பதன் அடையாளமாக அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை பேராலயத் திறப்பைப் புதிய ஆயருக்குக் கையளிப்பார். தொடர்ந்து பேராலய நற்கருணைப் பேழையின் திறப்பைப் பேராலயப் பங்குத்தந்தை புதிய ஆயருக்குக் கையளிப்பர்.



பின்னர் ஆயருக்குரிய ஆட்சியதிகாரங்களைக்குறிக்கும்செங்கோலை அப்போஸ்தலிக்க பரிபாலகர் புதிய ஆயருக்கு வழங்குவார். தொடர்ந்து அப்போஸ்தலிக்க பரிபாலகரும், கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் புதிய ஆயரை அழைத்துச் சென்று மறைமாவட்ட ஆயருக்குரிய பேராலயத்தின் அதிகாரபூர்வ இருக்கையில் அமர்த்துவர். பின்னர் மன்னார் மறைமாவட்டக் குருக்களும், மன்னார் மறைமாவட்டத்தில் பணி செய்யும் குருக்களும் வரிசையாக வந்து புதிய ஆயரின் மோதிரத்தை முத்தமிட்டு தமது வாழ்த்துக்களையும், வணக்கத்தையும் கீழ்ப்படிவையும் தெரிவிப்பர். தொடர்ந்து குருக்கள் புதிய ஆயரைச் சூழ்ந்து நிற்கும் நிலையில் தமக்கு வணக்கமும் கீழ்ப்படிவும் வழங்குதற்கான உறுதிமொழியை புதிய ஆயர் குருக்களிடமிருந்து பெற்றுக்கொள்வார். தொடர்ந்து துறவற சபைகளின் தலைவர்கள், பிரதான திருச்சபைகளின் தலைவர்கள், மன்னார் மறைமாவட்டத்தின் பொதுநிலைப் பிரதிநிதிகள் போன்றோர் புதிய ஆயருக்குத் தமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பர். தொடர்ந்து உன்னதங்களிலே கீதத்துடன் புதிய ஆயரின் தலைமையில் திருப்பலி தொடர்ந்து இடம் பெறும் – என்றார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## வரவே வராதாம் தீர்வு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 2016 இல் தீர்வு என்றார். இப்போது 2017 ஆம் ஆண்டும் கடக்கப் போகின்றது. 2018 இலாவது தீர்வு சாத்தியமா என்று சிலர் கேட்கின்றனர். ஆனால் தீர்வே சாத்தியம் இல்லை என்பதுதான் நிலைமை.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை - கோரிக்கைகளை - நிறைவேற்றும் வகையில் நியாயமான - நிரந்தரமான - தீர்வு ஒன்று வரும் என்று தாம் நம்பவேயில்லை என கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவர் சித்தார்த்தனும் இப்போது அடித்துக் கூறிவிட்டார்.

தென்னிலங்கை நிலைமை அதனைத்தான் கூறுகின்றது என்பதை சாதாரண வாசகர்களும் ஊகித்துக் கொள்ளும் நிலைமையில்தான் அரசியல் களநிலைவரம் உள்ளது.

ஐ.தே.கட்சியும் சுதந்திரக் கட்சியும் சேர்ந்து நிறுவிய நல்லாட்சி அரசு மூலம் தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையில்தான் 2016இல் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் நியாயமான தீர்வு கிட்டும் என்றார் சம்பந்தன்.

ஆனால் நல்லாட்சி அரசின் இணக்கப்பாடோ இப்போது தொத்துப்பொறியில் அல்லாடுகின்றது. அந்த அரசை நிறுவுவதற்கு ஐ.தே.க. - சு.க. தலைமைகள் செய்துகொண்ட இரண்டு ஆண்டு கால உடன்பாடு - இணக்கம் - ஏற்கனவே காலாவதியாகிவிட்டது. அதனை இந்த வருட இறுதிவரை இழுத்துப்பறிக்கும் சம்மதத்தை இரு தரப்புத் தலைவர்களும் வெளியிட்டனர். அந்தக் காலக் கெடுவும் கூட இன்னும் இரண்டு நாள்களில் காலாவதியாகிவிடும்.

எனினும் பெப்ரவரி 10 உள்ளூராட்சித் தேர்தல்வரை இந்தக் கூட்டு - இணக்கம் - தொடரும் என்று இப்போது தெரிவிக்கப்படுகின்றது.

நல்லாட்சி அரசின் பங்காளித் தரப்புகளான ஐ.தே.கவும் சு.கவும் இந்த அரசில் இருந்தபடி இத்தேர்தலை எதிர்கொள்வதே தங்களுக்கு நல்லது - கஜ, பத, துராதிகளோடு தாங்கள் தேர்தலை எதிர்கொள்ள வசதியாக இருக்கும் - என்று கருதி அரசுக்கான கூட்டை சொற்ப காலத்துக்கு இழுத்தடிக்க இணங்கியிருக்கின்றன. அதுதான் உண்மை.

தேர்தல் முடிந்த கையோடு களநிலைமையும் மாறும்; அரசியல் கதையின் போக்கும் கூட மாறும். அதற்குக் கட்டியம் கூறும் செய்திகளும் தகவல்களும் ஏற்கனவே வரத் தொடங்கிவிட்டன.

இந்த உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் சுதந்திரக் கட்சியும் - முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியும் இணைந்து செயற்படும் என்று சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரும் மூத்த அமைச்சருமான சுசில் பிரேமஜயந்தவே சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் செய்தியாளர்களைக் கூட்டி வைத்து அறிவித்திருக்கின்றமை இதற்குக் கட்டியம் கூறும் விடயமன்றி வேறில்லை.

சுதந்திரக்கட்சியின் எம்.பிக்களாக இருந்து கொண்டு அக்கட்சியின் எம்.பிக்கள் நாற்பது பேரைத் திரட்டி வைத்து சுதந்திரக் கட்சிக்கு எதிராக தேசம் முழுவதும் வேட்பாளர்களைக் களம் இறக்கியிருக்கின்றார் மஹிந்த ராஜபக்ஷ.

அவர் மீது கட்சியின் ஒழுங்கு நடவடிக்கை பாயும் என்று ஆரம்பத்தில் கனல் தெறிக்க அறிக்கைகள் - அறிவிப்புகள் - விடுத்த சு.க. தலைவர்கள் இப்போது திடீரென சுருதியை மாற்றிக் கொண்டனர்.

மஹிந்த தலைமையில் செயற்படும் கூட்டு எதிரணியுடன் இணைந்து உள்ளூராட்சி மன்றங்கள் தோறும் ஆட்சியமைப்போம் என்றும் மஹிந்த தரப்பு தனித்துச் செயற்பட்டாலும் நாங்களும் அவர்களும் ஓரணி என்பதை மறந்துவிடக் கூடாது என்றும் சு.க. தலைவர்கள் இப்போதே கூறத் தொடங்கிவிட்டமை உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் கட்டவிழக்கூடிய விடயங்களுக்கான முன்கதை ஓட்டம்தான்.

'சேடம்' இழுக்கும் நிலைமை நோக்கி நகரத் தலைப்பட்டிருக்கும் நல்லாட்சி அரசுக்கான இணக்கப்பாட்டுக்கு பிராணவாயு கொடுக்கும் கடைசி நேர முயற்சியை மருத்துவிச்சியாக முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா அம்மையார் ஆரம்பித்து விட்டார் எனக் கூறப்படுகின்றது.

ஆனால் உள்ளூராட்சித் தேர்தல் முடிவு என்ற சூறைக் காற்று இந்த முதலுதவிச் சிகிச்சைகள், மருந்துகளை எல்லாவற்றையும் ஒரு சுழற்று சுழற்றி அடித்து, நல்லாட்சிக்கான உடன்பாடு என்ற இணக்கத்தை குப்பைக் கூடைக்குள் கடாசும் என்றே அவதானிகள் பலரும் நம்புகின்றனர்.

அப்போது, சுமார் இரண்டரை, மூன்று வருடங்களாக முக்கி தக்கி பெற்றெடுத்த இடைக்கால அறிக்கை என்ற பெறுபேறும் அதனோடு சேர்ந்து குப்பைக் கூடைக்குள் கடாசப்படும் சூழலே ஏற்படும் போலத் தோன்றுகின்றது.

2016இல் தீர்வு என்றோர், 2017 உம் கடந்த பின்னர், 2018 இல் ஒன்றுமில்லை என்றாகும் போது மக்களிடம் என்ன சொல்வர்?

அதற்கேன் கவலை? *"வடக்கு - கிழக்கு இணைந்த தமிழரின் பூர்வீகத் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வு' ஒன்றே எமது இறுதியும் உறுதியுமான இலக்கு. தமிழர்களின் அந்த மாற்ற முடியாத - தீர்க்கமான - அபிலாஷையை எட்டுவதற்கு உறுதியுடன் விட்டுக் கொடுப்புகளுக்கோ, சலுகைகளுக்கோ இடமளிக்காமல் போராடுவோம்!"* - என்ற பழைய கோஷத்தை மீண்டும் தூசு தட்டி எடுத்து முன்வைத்தால் போயிற்று. அதுதான் நடக்கும்.

## புதிய கட்டளை அதிகாரியாக கொமாண்டர் கயான் விக்ரமசூரிய!

இலங்கை கடற்படையின் ரோந்துக்கப்பலான ரணதீரவின் புதிய கட்டளை அதிகாரியாகக் கொமாண்டர் கயான் விக்ரமசூரிய தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.



கொழும்பு துறைமுக வளாகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கப்பலின் முன்னாள் கட்டளை அதிகாரியான கப்டன் (திசைகாட்டி) துஷார ஜயவர்த்தனவால் புதிய கட்டளை அதிகாரிக்கு கடற்படை மரபு ரீதியாகக் கடமைகள் ஒப்படைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மேற்கு கடற்படைக் கட்டளையின் துணைத் தளபதி கொமடோர் சனத் உத்பல கலந்துகொன்டார்.

## மஹிந்தவின் இல்லத்தில் மின்சாரம் துண்டிப்பு!

கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று திடீரென மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகவும் இதன் காரணமாக வீட்டில் நீர் விநியோகமும் தடைப்பட்டது எனவும் தெரிய வருகிறது.

மேலும் இல்லத்தில் மின் பிறப்பாக்கி இயந்திரத்திலும் கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனை திருத்தும் பொறுப்பு கடற்படையினருக்கே வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து சில முறை கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.மின் பிறப்பாக்கி இயந்திரத்தைப் பழுது பார்க்கப் போதுமான நிதி கிடைக்கவில்லை எனக் கடற்படையினர் கூறியுள்ளனர்.

எவ்வாறாயினும், இது குறித்து ஆராய்ந்து துரித நடவடிக்கை எடுப்பதாக கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் எஸ்.எஸ்.ரணசிங்க தெரிவித்துள்ளார்.

## வவுனியாவில் இராணுவத்தின் விசாலமான உணவகம்!



வவுனியா, டிசெ. 29

வவுனியாவில் அனைத்து வசதிகளுடனும் கூடிய உணவகம் ஒன்று இராணுவத்தினரால் திறக்கப்பட்டுள்ளது.

வன்னி பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் கீழ் இயங்கும் 62 ஆவது படை பிரிவுகளின் 621 ஆவது படைப்பிரிவிற்கு விஜயம் மேற்கொண்ட வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரேரா இந்த உணவகத்தை திறந்து வைத்துள்ளார்.

இந்த கட்டடம் இயற்கை சூழலுடன் விசாலமான உணவுச் சாலை, அதிகாரிகள் தங்கும் அறை, தொலைக்காட்சி அறை மற்றும் பல இட வசதிகளுடன் மாடிக் கட்டடமாக கட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த நிகழ்வில் 62 ஆவது பாதுகாப்பு படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சஞ்சய வனிகசூரிய மற்றும் கட்டளை அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முடிந்தால் உறுப்பினர் பதவியைப் பறியுங்கள்; சவால் விடுகிறார் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்!

முடிந்தால் தம்மை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குமாறு கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த சவால் விடுத்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பான அரசியல் விவாதம் ஒன்றில் கருத்து வெளியிடும் போதே அவர் இந்தச் சவாலை விடுத்திருந்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எந்த இடத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்கப் போவதாகக் கூறப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அரசை அமைத்து மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை மீறியமைக்கு எதிராகவே தாம் பொதுஜன முன்னணிக்குத் தேர்தலில் ஆதரவு வழங்குகிறோம் என சனத் நிஷாந்த குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வெற்றிக்காகப் பாடுபடப் போவதாக கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 53 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகித்து வருகின்றனர்.

இவர்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில், பொதுஜன முன்னணிக்கு ஆத ரவு வழங்கினால், அவர்கள் கட்சியில் இருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்படுவார்கள் என சுதந்திரக்கட்சி அறிவித்திருந்தது.

### நாளை

30.12.2017
சனிக்கிழமை

நட்சத்திரம் : கார்த்திகை மா. 6.17 வரை
திதி : துவாதசி பி.ப 4.01 வரை
சுபநேரம் : 3.29 – 4.59 வரை
இராகுகாலம்: 9.29 – 10.59 வரை

# சு.கவும் பொது எதிரணியும் இணைந்தே உள்ளூராட்சி மன்றங்களை அமைக்கும்!



## தனித்துச் செயற்பட்டாலும் ஓர் அணியே என்கிறார் சுசில்

கொழும்பு, டிசெ. 29

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பொது எதிரணியும் இணைந்தே உள்ளூராட்சி மன்றங்களை அமைக்கும் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்போது தனித்துச் செயற்பட்டாலும் மஹிந்த தரப்பும் நாங்களும் ஓர் அணியென்பதை மறந்து விட வேண்டாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் பலம் மிகவும் உயரிய மட்டத்தில் உள்ளது. எமது வேட்பாளர்களைச் சரியாக தெரிவு செய்து களத்தில் இறக்கியுள்ளோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகள்இணைந்துஇம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எமது வெற்றியைப் பெற்றுக்கொள்ளும்வகையில் நடத்தும் மாநாடு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

அத்துடன், கட்சியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் எமது வேட்பாளர்களை ஒன்றிணைத்த மாநாடும் சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இந்த மாநாடுகள் இடம்பெறவுள்ளன.

மேலும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் இருந்து ஒரு தரப்பினர் தனித்து களமிறங்குகின்றனர். அனைவரையும் ஒன்றிணைத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாக களமிறங்க வேண்டும் என்றே நாம் விரும்பினோம். அதற்காகவே பொது அணியுடன் நாம் தொடர்ச்சியாக பேச்சுக்களையும் முன்னெடுத்தோம்.

எனினும், அவை வெற்றியளிக்கவில்லை. எவ்வாறு இருப்பினும் இறுதியில் அவர்கள் மீண்டும் எமது கட்சிக்கு வந்தாக வேண்டும்.

ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியின் கடந்தகால வரலாறுகள் என்னவென்பது இன்றைய சிரேஷ்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் நினைவில் இருக்கும் என நம்புகின்றேன்.

தொடர்ச்சியாக 17 ஆண்டுகள் தோல்வியின் பின்னர் நாற்காலி சின்னத்தில் களமிறங்கி உள்ளூராட்சிச் சபைகளையும், பொதுத்தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலை நாம் வெற்றிகொண்டோம்.

மஹிந்த ராஜபக்ஷவே இன்றும் நாற்காலி சின்னத்தின் தலைவர். முன்னாள் பிரதமர் டி.எம். ஜெயரத்னவே கட்சியின் பொதுச்செயலாளர். இதன் அடிப்படையிலேயே நாம் இம்முறையும் இணைந்து செயற்பட விரும்பினோம். எனினும் இப்போது அதற்கான வாய்ப்புகள் இல்லை.

எனினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெற்றிபெறும். அதேபோல் நாம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்படும் பொது எதிரணியுடன் இணைந்தே ஆட்சியமைப்போம். அவர்கள் பிரிந்து செயற்பட்ட போதிலும் அவர்கள் எமது உறுப்பினர்களேயாவர்.

அவ்வாறு இருக்கையில் ஐக்கிய தேசியக் கட்சி இந்த முறை அவசியம் இல்லை. அவர்களுடன் நாம் உள்ளூராட்சி மன்றங்களை இணைத்து அமைக்க வேண்டிய தேவை இல்லை. தேர்தல் முடிந்தவுடன் முடிவுகளை பாருங்கள். எமக்கே வெற்றி கிடைக்கும். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

## சிறந்த பொருளியலாளராக வருவதே எனது இலக்கு! யாழ்.மாவட்டத்தில் 2 ஆம் இடத்தைப் பெற்ற மாணவன்



சிறந்த ஒரு பொருளியலாளராக வந்து எமது சமூகத்துக்குச் சேவையாற்றுவதே எனது எதிர்கால இலக்கு எனக் கணிதத்துறையில் தேசிய மட்டத்தில் 3 ஆம் இடத்தையும் யாழ். மாவட்டத்தில் 2 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்ட மாணவன் றேமன் டெய்சியஸ் ஜெயராஜன்போல்ஜான்சன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஆரம்பப் பிரிவில் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வி கற்று சிறந்த சித்தி பெற்று, பின்னர் கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் 9 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றேன்.

எனக்கு சிறுவயது முதலே கணிதப் பிரிவில் அதிக ஈடுபாடு இருந்தமையால் உயர்தரத்திலும் கணிதப் பிரிவைத் தெரிவுசெய்து கொண்டேன். அதிகமாக எனது கல்வியை அதிகாலை பொழுதில்தான் தொடர்வேன். எதிர்கால மாணவர்களும் கடினமான பயிற்சியை முன்னெடுத்தால் என்னை விடச் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எதிர்காலத்தில் சிறந்த ஒரு பொறியியலாளராக வந்து இந்த சமூகத்திற்குக் கடமையாற்றுவதே எனது இலக்கு என்றும் அவர் தெரிவித்தார்.

## தாய் மரணவீதம் குறைந்த நாடாக இலங்கை!

கொழும்பு, டிசெ. 29

கடந்த 2016 ஆம் ஆண்டில் தாய், சேய் மரண புள்ளி விவரங்களின் அடிப்படையில், 112 தாய் மரணங்கள் பதிவாகியுள்ளன என சுகாதார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை குடும்ப சுகாதார அலுவலக பணிப்பாளர் வைத்தியர் பிரியானி சேனாதீர மற்றும் சமூக வைத்திய நிபுணர் கபில ஜெயரத்னவால் அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி தெற்காசிய நாடுகளில் இலங்கையிலேயே குறைவான தாய் மரணங்கள் பதிவாகியுள்ள போதிலும் நேரடியான தாய் மரணங்கள் இந்த வருடம் அதிகரித்துள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.


இதற்கான காரணமாக பிரசவத்தின் பின்னரான இரத்தப் போக்கு மற்றும் இதயக் கோளாறு என்பன தெரிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், 43 வீதமான தாய் மரணங்கள் சரியான நேரத்திற்கு மருத்துவ சிகிச்சையை பெற்றுக் கொள்ளாமையால் ஏற்பட்டுள்ளன என்றும் 20 மரணங்கள் குடும்பத்தினரின் உரிய பராமரிப்பு இல்லாமல் ஏற்பட்டுள்ளன என்றும் பதிவாகியுள்ளன என சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், சுகாதார பணியாளர்களின் தாமதங்கள் காரணமாக 44 தாய் மரணங்கள் ஏற்பட நேரடி மற்றும் மறைமுக காரணங்களாக அமைந்துள்ளன எனவும் கூறப்பட்டுள்ளது.

(க)

## யாழில் இருந்து சென்ற ரயிலில் மோதி ஒருவர் பலி!



யாழ்ப்பாணத்தில் இருந்து கல்கிஸ்ஸ நோக்கிச் சென்ற ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து வெள்ளவத்தை பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் வெள்ளவத்தைப் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க)

## ஹட்டன் ஹைலண்ஸ் கல்லூரி மாணவன் நுவரெலியா மாவட்டத்தில் முதலாம் இடம்


கொழும்பு, டிசெ. 29

வெளியான ஜி.சீ.ஈ உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், ஹட்டன் ஹைலண்ஸ் கல்லூரியின் மாணவன் பௌதீக விஞ்ஞான பிரிவில் நுவரெலியா மாவட்டத்தில் முதலாம் இடத்தையும், அகில இலங்கை ரீதியில் ஒன்பதாவது இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

ராகலை – ஹல்கரனோயா பகுதியை வசிப்பிடமாகவும், ஹட்டன் ஹைலண்ஸ் கல்லூரியில் கல்வி பயிலும் அ.திஷாந்தன் என்ற மாணவனே 3ஏ என்ற பெறுபேற்றைப் பெற்று நுவரெலியா மாவட்டத்தில் முதலாம் இடத்தையும், அகில இலங்கை ரீதியில் 9 ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

இவர் க.பொ.த சாதாரண தரப்பரீட்சை மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையிலும் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்திருந்தார்.

அருள்மொழிவர்மன், உமா தம்பதியரின் புதல்வனானதிஷாந்தனை ஹட்டன் ஹைலண்ஸ் கல்லூரியின் அதிபர் ஆர்.ஸ்ரீதரன், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.



# யாரைத் தெரிவுசெய்ய வேண்டும்? எம் மக்களுக்கு எல்லாமே தெரியும்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் யோகநாதன்

மட்டக்களப்பு,டிசெ.29

எமது கிராமத்திலுள்ள அனைத்து மக்களும் படித்தவர்கள் எனவே, அவர்களுக்கு யார் சேவை செய்வார்கள், செய்யமாட்டார்கள் என்பதை பகுத்தறிந்து கொள்ளும் அறிவு அவர்களிடம் தராளமாகவே உள்ளது என உள்ளூராட்சித் தேர்தலில் மண்முனை தென் எருவில் பற்றுப் பிரதேச சபைக்கு களுதாவளை தெற்கு வட்டாரம் சார்பாகப் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் ஞா. யோகநாதன் தெரிவித்துள்ளார்.



உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக ஊடகங்களுக்கு கடந்த புதன்கிழமை கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு–

எமது கிராமமான களுதாவளையைப் பொறுத்தளவில் அனைத்து மக்களும் படித்தவர்கள் எனவே, அவர்களுக்கு யார் சேவை செய்வார்கள் யார் சேவை செய்யமாட்டார்கள் என்பதைப் பகுத்தறிந்து கொள்ளும் அறிவு அவர்களிடம் தராளமாகவே உள்ளது.

இதன் அடிப்படையில் நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் களமிறங்கியுள்ளேன். வேட்பாளர்களில் சேவையாற்றக் கூடியவர்களை அடையாளங்கண்டு எமது கிராம மக்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

ஊழல் மோசடிகள் அற்ற சேவையை ஆற்றக் கூடியவர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறானவர்களைத் தெரிவு செய்வதன் ஊடாகவே எமது பிரதேசம் வளர்ச்சியடையும். இத்தேர்தலைப் பொறுத்தளவில் பல கட்சிகள் எமது கிராமத்தைச் சார்ந்தவர்களை எமது கிராமத்தில் களம் இறக்கி உள்ளனர்.

எனவே நீண்டகாலமாக அனைவரையும் அனைத்து மக்களும் அறிந்து வைத்துள்ளனர் அவர்கள் சரியாக இனங்கண்டு தங்களது பிரதேசத்தின் நன்மைகருதி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள்.

அதற்கு மேலாக எமது மக்கள் தமிழ்த் தேசியத்தின்பால் நிற்கின்றனர். அவர்கள் இத்தேர்தல் ஊடாக தேசியத்தை நிலைநாட்ட வேண்டிய தேவையுள்ளது இது காலத்தின் தேவையும் கூட. எனவே எமது மக்கள் இத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெற வைப்பது காலத்தின் தேவையாகும் என அவர் இதன் போது தெரிவித்தார்.

## சட்டவிரோத மதுபானம் காய்ச்சியவர் கைது

திருகோணமலை,டிசெ.29

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மல்லிகைத்தீவு மனைச்சேனைப் பகுதியில் சட்ட விரோதமாக மதுபானம் காய்ச்சும் இடம்சுற்றி வளைக்கப்பட்டு சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

55 வயது மதிக்கத்தக்க ஒருவரே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளார் எனவும், மதுபானம் காய்ச்சப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் மூதூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூதூர் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட நிலையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சிரமதானப் பணிகளில் படையினர்

திருகோணமலை ஸ்ரீதுர்கை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கிழக்கு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் கீழ் இயங் கும் 22ஆவது படைப் பிரிவினர் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் பிரதேசவாசிகளுடன் ஒன்றிணைந்து படையினர் கோயில் வளாகத்தின் சிரமதான பணிகளில் ஈடுபட்டனர்.

22ஆவது பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் படைத் தளபதி மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரஹேவின் ஆலோசனையின் கீழ் படையினர் ஒத்துழைப்பு வழங்கினர். அத்துடன் பூஜையை முன்னிட்டு வருகை தந்திருந்த 500இற்கு மேற்பட்ட பக்தர்கள் அனைவருக்கும் படையினரால் தேநீர் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து படையினரால் பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டமைக்குக் கோயில் குருக்கள் மற்றும் பக்தர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்த பூஜையை முன்னிட்டு 22ஆவது பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கேர்ணல் எச்.எச்.என்.பி ஹேரத் , இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் , படையினர் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.






# ஜப்பானிய நாட்டின் வெளிவிவகார அமைச்சர் 15 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையில்!

கொழும்பு, டிசெ. 29
ஜப்பானிய வெளி விவகார அமைச்சர் ஒருவர், 15 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கைக்கு அதிகாரபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்கிறார்.

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் ராரோ கோனோவே எதிர்வரும் ஜனவரி 4 ஆம் திகதி இலங்கைக்கு அதிகார பூர்வ விஜயம் ஒன்றை மேற் கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி 4 ஆம் திகதி கொழும்பு வரும், ஜப்பானிய வெளி விவகார அமைச்சர் ராரோ கோனோ, 6 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருப்பார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன 2016 ஆம் ஆண்டும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த ஏப்ரல் மாதமும், ஜப்பானுக்கு மேற்கொண்ட பயணங்களின் மூலம் ஏற்படுத்தப்பட்ட இலங்கை - ஜப்பான் இடையிலான விரிவான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலேயே ஜப்பானிய வெளி விவகார அமைச்சரின் இந்தப் பயணம் இடம் பெறவுள்ளது.

இந்தப் பயணத்தின் போது, மைத் திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோரைச் சந்தித்து, இருதரப்பு உறவுகள் மற்றும் பிராந்திய, அனைத்துலக விவகாரங்கள் குறித்து ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் ராரோ கோனோ பேச்சுக்களை நடத்தவுள்ளார்.



## உயர்தரப் பெறுபேறு மீள் பரிசீலனை இறுதித் திகதி ஜன. 15 என அறிவிப்பு

இடம்பெற்று முடிந்த 2017 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீள் பரிசீலனை செய்வதற்காக விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி பரீட்சைகள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பரீட்சைப் பெறுபேறுகளின் மீள் பரிசீலனைக்காக எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என பரீட்சைகள்திணைக்களம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், ஒரு லட்சத்து அறுபத்து மூவாயிரத்து 104 மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கான அனுமதி பெறக் கூடிய வாய்ப்புள்ளது என்றும் பரீட்சைக்குத் தோற்றிய 205 மாணவர்களின் பெறுபேறுகள் இடைநிறுத்தப் பட்டுள்ளன என்றும் பரீட்சைகள் திணைக் களம் மேலும் அறிவித்துள்ளது.

இதேவேளை , பெறுபேறுகள் தொடர்பில் எழும் சந்தேகங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக சிறப்பு தொலைபேசி இலக்கங்கள் சில பரீட்சைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளன.

அந்தத் தொலைபேசி இலக்கங்கள் வருமாறு:- 0112784201, 0112784537, 0113188350, 0113140314, 1911

## சவூதியில் 3 வருட சிகிச்சையின் பின் இலங்கை வந்த பெண்ணின் சடலம்!

### மரணத்தில் சந்தேகம்

கெக்கிராவ பகுதியில் சவூதிக்கு பணிப் பெண்ணாகச் சென்று உயிரிழந்த பெண்ணின் மரணத்தில் சந்தேகம் காணப் படுகிறது என அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு மாடிக் கட்டடத்தில் இருந்து உயிரிழந்தார் என தெரிவித்து, இந்தப் பெண்ணின் சடலம் நேற்று முன்தினம் இலங்கைக்கு கொண்டுவரப் பட்டது.

இந்தப் பெண் கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் மாடியிலிருந்து விழுந்துள்ள நிலையில், இதுவரைகாலம் சவூதியில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்துள்ளார் எனத் தெரியவருகிறது.

இவ்வாறு சிகிச்சைபெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார். இதனையடுத்து உறவினர்கள் வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உதவியுடன் சடலத்தை இலங்கைக்கு கொண்டு வந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

கிதுல்ஹிடியாவ, உலுகெடவெவ பிரதேசத்தைச் சேர்ந்த இந்தப் பெண் கடந்த 2011 ஆம் ஆண்டு சவூதிக்குப் பணிப் பெண்ணாகச் சென்றுள்ளார்.

இந்தப் பெண்ணை பலாக் காரமான முறையில் வைத்துக் கொண்டு சம்பளம் வழங்காதிருந்தனர் என, உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் தெரிவித் துள்ளனர்.

எனவே, இந்த மரணத்தில் தமக்குச் சந்தேகம் உள்ளது எனவும் அரசு இந்த விடயத்தில் தலையிட்டு உரிய விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## 25 ஆயிரம் ரூபா அபராதச் சட்டம்; அமுல்படுத்துவதற்கு காலதாமதம்!

வீதிப் போக்குவரத்து விதி மீறல்களில் ஈடுபடும் சாரதிகளுக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கும் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு காலம் தாழ்த்தப்படுவதனால் அதிகளவில் வாகன விபத்துக்கள் இடம்பெறுகின்றன என குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

வீதிப் போக்குவரத்து சட்ட மீறல்கள் தொடர்பான சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டுமென சமூகத்தில் எழுந்த கருத்துக்களின் அடிப்படையில் அபராதத் தொகை உயர்வு குறித்த உத்தேச சட்டம் உருவாக் கப்பட்டது.

எனினும், இந்தச் சட்டத்தை உருவாக்கும் நடவடிக்கைகள் இதுவரையில் பூர்த்தியாக வில்லை. இதன் காரணமாக 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கும் நடைமுறை காலம் தாழ்த்தப்படுவதாக வீதிப் பாதுகாப்பு குறித்த தேசிய சபையின் தலைவர் சிசிர கோதாகொட தெரிவித்துள்ளார்.

25 ஆயிரம் ரூபா அபராதம் தொடர்பிலான அறிவிப்பு விடுக்கப்பட்ட போது விபத் துக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவானதாகவும் பின்னர், மீளவும் தற்போது வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். (க)

## தேசிய அரசு நீடிக்குமா?

கொழும்பு, டிசெ. 29
தேசிய அரசு தொடர்ந்தும் நீடிக்குமா? இல்லையா? என்பது குறித்து உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் பின்னர் தீர்மானிக் கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் தேசிய அரசு அமைப்பது குறித்த உடன்படிக்கை நாளை மறு தினம் 31ஆம் திகதியுடன் காலாவதியாகின்றது.

இதனால், எதிர்வரும் காலங்களில் தேசிய அரசு இணைந்திருப்பதா அல்லது வெளியேறுவதா என்பது குறித்து கட்சி தீர்மானிக்க உள்ளது.

சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு மற்றும் அகில இலங்கை செயற்குழு ஆகியனவற்றின் கூட்டங்கள் இந்த வாரத்தில் நடத்த திட்ட மிடப்பட்டுள்ளன.

நாளை மறுதினம் 31ஆம் திகதி தேசிய அரசு குறித்த உடன்படிக்கை காலாவதியாகி னாலும் தேர்தல் முடியும் வரையில் அரசுடன் இணைந் திருப்பது என கட்சி தீர்மானித் துள்ளது.

## இடியுடன் கூடிய மழை பெய்யும்

கொழும்பு, டிசெ. 29
நாட்டின் சப்ரகமுவ மாகாணம் மற்றும் காலி, மாத்தறை, களுத்துறை மாவட்டங்களில் பிற்பகல் 2.00 மணியின் பின்னர் மழை அல்லது இடியு டன் கூடிய மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித் துள்ளது.



ஊவா மாகாணம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சில இடங்களில் ஓரளவு மழை பெய்யும்.

ஊவா மாகாணம் கொழும்பு கம்பஹா மற்றும் அம்பாந் தோட்டை மாவட்டங்களில் 40 அதிகமான காற்று வீசக்கூடும்.

மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையிலான கடற்கரையோர பிரதேசங்களில் ஓரளவு மழைபெய்யும்.

இடியுடன் கூடிய மழையின்போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும். இடி மின்னலிலிருந்து பொதுமக்கள் அவதானமாக செயற்படுமாறு திணைக் களம் கேட்டுக்கொண் டுள்ளது. (க)

## புதையல் அகழ்வில் ஈடுபட்ட 6 பேர் கைது!

கொழும்பு, டிசெ. 29
கிராதுருகோட்டே பகுதியில் புதையல் பெற்றுக்கொள்வதற்காக அகழ்வில் ஈடுபட்ட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்கள் தெமடன் அல்ல, கல்பொருயாய, பகுதியில் அகழ்வில் ஈடு பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து பூஜை பொருள்கள், அகழ்விற் காக பயன்படுத்திய உப கரணங்கள் ஆகியன வும்கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் கடுவலை, தெல்தெனிய, மொனராகலை, வுனுகல, செவனகல மற்றும் கிராதுருகோட்டே பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் இன்று மஹியங்கனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர் (க)

# இணையத்தின் புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின்27ஆவதுஆண்டுப்பொதுக்கூட்டம்அண்மையில்ரி.தேவானந்த் தலைமையில் இணைய அலுவலகத்தில் நடைபெற்றது. பிரதம அதிதியாக யாழ். மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் கலந்து சிறப்பித்திருந்தார். இக்கூட்டத்தில் நிதி, நிர்வாக, அபிவிருத்தி, செயற்பாட்டு அறிக்கைகள் மற்றும் 27ஆவது ஆண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன்பின்னர்2018ஆம்ஆண்டிற்கானநிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்– ரி.தேவானந்த், செயலாளர் – செல்வி. பி.ஜமுனாதேவி, பொருளாளர் – வி.ஜி.தங்கவேல், உபதலைவர் – செல்வி.எஸ்.யாழினி, உப செயலாளர் – வி.சுதர்சன் ஆகியோரும்

அங்கத்தவர்களாக வி.பரம்சோதி, திருமதி.வி.உதயசந்திரிக்கா, வி.கேசவன், திருமதி.எச்.வான்சலீன் –

ஆகியோரும் உள்ளக கணக்காய்வாளராக திருமதி.ரி.சுமதி, பத்திராதிபராக வி.முருகதாஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ

## தினசரி ராசி பலன் 29.12.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மார்கழித்திங்கள் 14ஆம் நாள் வெள்ளிக்கிழமை ஏகாதசித்திதி இரவு 9.54 மணி வரை பின்னர் துவாதசி. நட்சத்திரம் பரணி இரவு 10.56 மணிவரை பின்னர் கார்த்திகை சித்தயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** *-பகல் 10.46 மணி முதல் 12.13 மணி வரை*

**சுபநேரம்** *-மாலை 6.31மணி முதல்08.01மணி வரை*

**திவசம்செய்யவேண்டியதிதி**- *மார்கழிமாத வளர்பிறைஏகாதசி*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *பரணி*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** இனிமையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் இனிய சூழல் நிலவும். பகையாய் இருந்தவர்கள் மீண்டும் நட்புடன் பழகுவார்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும்

**ரிஷபம்:** சலனம் மிகுந்த நாள். மனதில் ஒரு விதமான கவலை உண்டாகும். உடல்நிலை பாதிப்படையும். தொழில் கடினஉழைப்பும், கவனக் குறைவும் உண்டாகும். மாணவர்களுக்கு ஞாபக சக்தி குறைவடையும்.

**மிதுனம்:** யோகமான நாள். பணவரவு அதிகரிக்கும். குடும்ப உறவு மேம்படும். சிலருக்கு தொழில் கிடைத்து வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும். புதிய வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.

**கடகம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வருவாய் ஓரளவு இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். குடும்ப அமைதி பேணப்படும். குடும்ப உறுப்பினர்களின் உடல் நிலை பாதிப்புறும்.

**சிம்மம்:** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். தொழில் செய்யும் பெண்களுக்கு மதிப்பு, மரியாதை, வரவேற்பு அதிகரிக்கும்.

**கன்னி:** சஞ்சலமான நாள். மனக்குழப்பம் யோசனை அதிகரிக்கம். பணம் பற்றாக்குறையாக இருக்கும். வியாபாரத்தில் பெரிய நட்புண்டாகும். உத்தியோகத்தில் கடின உழைப்பும், பொறுப்புகளும் அதிகரிக்கும்.

**துலாம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். தேவையற்ற செலவுகள் உண்டாகும். குடும்பச் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் கடன்படும் நிலை உண்டாகும்.

**விருச்சிகம்:** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் முன்னேற்றமடையும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள்.

**தனுசு:** மகிழ்ச்சியான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். வீட்டில் சுப நிகழ்ச்சி நடக்கும். சிலர் வாடகை வீட்டை விட்டு சொந்த வீட்டிற்கு குடிபோவார்கள்.

**மகரம்:** துயரமான நாள். பணத்தட்டுப்பாடு உண்டாகும். தொழிலில் பல இடையூறுகள் உண்டாகும். உத்தியோகத்தில் கவனக் குறைவால் அதிகாரிகளின் கண்டனத்திற்கு ஆளாக நேரும்.

**கும்பம்:** விருத்தியான நாள். பொருளாதாரம் விருத்தியடையும். குடும்ப நல்லுறவில் அபிவிருத்தி காணப்படும். வியாபாரம் நன்கு விருத்தியடையும். மாணவர்கள் தேர்வில் சிறந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள்.

**மீனம்:** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். உடலில் சுறுசுறுப்பும் தைரியமும் உண்டாகும். சகோதர உறவு பலப்படும்.

சந்திராட்டமநாள்: உத்தரம் 2ஆம், 3ஆம்,4ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகாரியங்களை தொடங்குவதை தவிர்க்க வேண்டும்.

# ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் வைகுண்ட ஏகாதசி உற்சவம்

வடமராட்சி, டிசெ.29

துன்னாலை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் வைகுண்ட ஏகாதசி உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை இரவு நான்கு ஜாமப் பூஜைகளுடன் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. இன்று இரவு 7 மணி, 12 மணி, அதிகாலை 3.30 மணி ஆகிய நேரங்களில் விசேட அபிஷேகங்கள், பூசைகள் நடைபெறும்.

நாளை சனிக்கிழமை அதிகாலையில் வசந்த மண்டபத்தில் விசேட பூசை நடைபெற்று சக்கரத்தாழ்வார் உள்வீதி, வெளி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (இ)



# தொழில் மகத்துவத்தை ஆசான்கள் பேணி நடக்க வேண்டும்

மாற்றமடைந்துவரும் உலகிற்கு பொருத்தப்பாடுடையதும் ஆக்காீதியான திறன்களைக் கொண்டதும் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் தர்க்கரீதியாகவும் வெற்றிகரமாகவும் முகங்கொடுக்க கூடியதுமான ஆளுமை கொண்ட மாணவர்களை உருவாக்குதலே ஒவ்வோர் ஆசிரியர்களினதும் கடமைக் கூறாகும். சிறந்த ஆசிரியர் ஒருவர் மாணவர்களின் கற்றல் மேம்பாட்டை ஏற்படுத்துபவராகவும் மாணவரது கற்றலை எளிதாக்குபவர் என்றவகையில் ஆசிரியர் பயனுறுதி வாய்ந்த கவர்ச்சிகரமான கற்றல் சூழலை உருவாக்கிக் கொடுக்கக் கூடியவராகவும் கற்றலின்பால் மாணவர்களின் சுய ஊக்கத்தைத் தூண்டக் கூடியவராகவும் இருக்க வேண்டும்எனஎதிர்பார்க்கப்படுகின்றனர்.

கற்பித்தலின் முக்கிய நோக்கம் மாணவரைச் சுயதிறனில் நிறைவு பெறச்செய்வதாகும். அதற்காக ஆசிரியர் பல்வேறு உத்திகளைக் கையாண்டு மாணவரது உள்ளார்ந்த ஆற்றல்களை விருத்தி செய்வதற்கும் வெளிகொணர்வதற்கும் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கும் துணை புரிவர்.

வினைதிறன்மிக்க சிறந்த ஆசிரியர் நீடித்த கல்விச் செயன்முறையுடன் இணைந்திருப்பதுடன் மாணவர்களின் கற்றல் நிலைமைகளை அறிந்து மாணவர்களின் கற்றலினை மேம்படுத்துவதற்காகவும் அவர்களது ஆளுமை விருத்திக்காகவும் கற்பித்தல் திறன்களை காலத்திற்கு பொருந்தும் வகையில் தன்னை மாற்றியமைத்துக் கொள்வர். மாணவனுக்கு வழங்கப்படும் கல்வி உலகமயமாதலுக்கு ஏற்பதரமான கல்வியை வழங்குவதற்கு ஒவ்வோர் ஆசிரியரும் உறுதிகொள்ளவேண்டும். தனியே அறிவை மட்டும் வழங்குவதை விடுத்து மாணவரின் உத்தேச நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக மாணவர்கள் சுயமாகத் தொழிற்படக்கூடியவாறான கற்றல் சூழலை உருவாக்கும் பயனுறுதி வாய்ந்த கற்றல் அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதே தற்கால ஆசிரியரின் கடமைக் கூறாகும்.

கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர் மாணவரைக் கற்றலின்பால் ஈர்க்கக்கூடிய வகையில் கற்பித்தல் உத்திகளை மாற்றி அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். மாணவர்களின் கற்றலில் தேவைகளை இனங்கண்டு கவர்ச்சிகரமான முறையில் மாணவர்களை கற்றல் செயலூக்கத்துடன் ஈடுபடுத்தக் கூடிய மிகப் பிரதான வகிபாகத்தை ஆசிரியர் கையாள வேண்டும்.

**கற்பித்தலில் வினைத்திறன் மிக்கவர்களாக மிளிர வேண்டியதும் மிக அவசியம்**

மாறாக வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் அதிக நேரம் சமூக வலைத்தளங்களைப் பாவித்தல், கைத் தொலைபேசிப்பாவனை, ஏனைய ஆசிரியர்களுடன் நேரத்தை செலவழித்தல் போன்ற செயற்பாடுகள் தொழிலின் மகத்துவத்தை பாதிப்பதுடன் மாணவர்களின் கற்றல் அடைவு மட்டங்களில் பின்னடைவுக்குக் காரணங்களாக அமைகின்றன.

மாணவர்களுக்கான கல்வி சார் அடைவு மட்டங்களை வெற்றிகரமான வகையில் உருவாக்கத் தேவைப்படுகின்ற திறன்கள், தேர்ச்சிகளை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கோடு தமது கல்வித் தகைமைகளையும் தொழில் தகைமைகளையும் விருத்தி செய்து கொள்ள வினைத்திறனுள்ள ஆசிரியருக்கு வாண்மை விருத்தி அவசியமாகக் காணப்படுகின்றது.

ஒரு தயாரிப்பாளரைப் பொறுத்த வரையில் அவரது துறையில் எப்போதும் தனது திறன்களை காலத்திற்கேற்ப மாற்றிக் கொள்வது போல ஒரு வினைத்திறனுள்ள ஆசிரியரும் வகுப்பறைக் கற்பித்தலில் காலத்திற்கு ஏற்றவாறு தனது திறன்களை மாற்றிக் கொள்பவராகவும்தன்னை இற்றைப்படுத்திக் கொள்பவராகவும் காணப்படுவர்

கனகராசா நிஷாத்
ஆசிரியர்
மு/சுதந்திரபுரம் தமிழ் ம.வி.

காலைக்கதிர் Kalaikkathir



# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், டிசெ.29

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. பாடசாலை அதிபர்கள் 'காலைக்கதிருக்கு' அனுப்பி வைத்துள்ள பெறுபேறுகள் இங்கு வெளியிடப்படுகின்றன.

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

மாவட்டநிலையில் இருவர் முதலிடம்

3ஏ சித்தி - 20 மாணவர்கள்

2ஏபி - 26 மாணவர்கள்

மாவட்ட நிலை

**உயிரியல் பிரிவு - 1, 4 ஆம் இடம்**

**பொறியியல் தொழில்நுட்பம் - 1, 3, 4ஆம் இடம்**

**கணிதப் பிரிவு - 4 ஆம் இடம்**

**3ஏ பெற்றவர்கள்**

**கணிதப்பிரிவு**

எஸ்.முகுந்தன் (மாவட்ட நிலை-4,தேசிய நிலை-22), பி.மிஷாந் (மாவட்ட நிலை- 6, (தேசிய நிலை-30 ), எஸ்.சண்முகபவன் (மாவட்ட நிலை-7, தேசியநிலை-58) , எஸ்.பிரவீன் (மாவட்ட நிலை-10) , ரி.துவாரகன் (மாவட்ட நிலை-11) , எஸ்.திவாகரன் (மாவட்ட நிலை-13) ஜே.பிரணவன்(மாவட்ட நிலை-14),ரி.தக்ஷயன் (மாவட்ட நிலை-17), பி.சர்வேஸ்வரசர்மா(மாவட்ட நிலை-19),எஸ்.ராகுலன் (மாவட்ட நிலை-42)

**உயிரியல் பிரிவு**

மு.வக்சலன் (மாவட்டநிலை -01 தேசிய நிலை-9 ), கே.ஸ்ரீதுசன் (மாவட்ட நிலை -4,தேசிய நிலை 67), எஸ்.சிவகுமார் (மாவட்ட நிலை -22 ) , வை.சுவஸ்திகன் (மாவட்ட நிலை -28)

**வர்த்தகத்துறை**

எல்.சிவலக்சன் (மாவட்ட நிலை -6) , ரி.ஹரிதாஸ் (மாவட்ட நிலை -11) , எஸ்.கஜந்தன் (மாவட்ட நிலை -22 ), ஜி.கண்ணன் (மாவட்ட நிலை -27) , பி.சாருஜன் (மாவட்ட நிலை-31), பி.நிமலகாந்தன் (மாவட்ட நிலை -83)

**2 ஏபி பெறுபேறு பெற்றோர்**

**கணிதப்பிரிவு**

ரி.ஜதுஷிகன் (மாவட்ட நிலை -22) , எஸ்.சிவநீவன் (மாவட்ட நிலை -23) , கே.ஜதுஷன் (மாவட்ட நிலை -33) , யு.வினுஷன்(மாவட்ட நிலை- 37) , எஸ்.சாரங்கன் (மாவட்ட நிலை -40) , எம்.நிருண் (மாவட்ட நிலை-49), எஸ்.சரவணன் (மாவட்ட நிலை -50) , எஸ்.அச்சுதன் (மாவட்ட நிலை -51) , என்.நிகேதன் (மாவட்டநிலை-54) ,என்.சுமித்ரஷாந் (மாவட்ட நிலை -55), எஸ்.யுதர்ஷன் (மாவட்ட நிலை -56), எம்.அமலன்(மாவட்ட நிலை - 57) , ஆர்.சோபன் (மாவட்ட நிலை -72), ஏ.விதுஷாந் (மாவட்ட நிலை -76) , எஸ்.வர்ஷனன் (மாவட்டநிலை -103) , எல்.தினேஷன் (மாவட்ட நிலை -110)

**உயிரியல் பிரிவு**

எவ்.ஏ.சி.சாள்ஸ் அன்ரனி (மாவட்ட நிலை -58),எஸ்.லாவண்ஜன் (மாவட்ட நிலை -92), கே.சிவமைந்தன் (மாவட்ட நிலை -69), எஸ்.பராபரன் (மாவட்ட நிலை -49), கே.நவநீதன் (மாவட்ட நிலை -39 )

**வர்த்தகத்துறை**

ஆர்.நிதுஷன் , ரி.கிருஷாந்தன்

**பொறியியற் தொழில்நுட்பம்**

ஆர்.நிலக்ஷன் (மாவட்டநிலை-1, தேசிய நிலையில் - 8, ஆர்.கோகிலன் (மாவட்ட நிலை-3, தேசிய நிலை- 20), என்.ரிஷிகேசன் (மாவட்ட நிலை-4, தேசிய நிலை- 32)

* * *

**வட்டு. இந்துக் கல்லூரி**

**கணிதப்பிரிவு**

கே.சாரங்கன் ஏபிசி, எஸ். அனுசன்-ஏபிசி, கே.கந்தசொரூபன்- ஏ2 சி, ரி.நிதர்சன்- பி2 சி, ரி.திலக்சன்- பி 2சி, ஆர்.வினோதினி- ஏசிஎஸ், என்.பிரதீபன்- ஏசிஎஸ், கே.நிதுசன்- 3 சி.

**உயிரியல் பிரிவு**

எம்.அயூரன்- 2 ஏபி (மாவட்ட நிலை-36), ரி.கீர்த்தனா-2 பிசி, பி.ரிசிகாந்தி- ஏபிசி, எம்.ரம்மியா- பிசிஎஸ், ஜி. அபர்னா- பிசிஎஸ், கே.மோகனா- 3 சி, எஸ். மீரா- 3 சி, பி.பிரதா- 2சி எஸ்.

**கலைப்பிரிவு**

வை.விஜிதா- ஏ2 பி, ரி.துலக்சன்- ஏ 2சி, கே.கலக்சனா- ஏபிசி, எஸ்.தர்சனா- ஏபிசி, எஸ்.நிருஜா- ஏபிசி, ரி.அனுசா- ஏ2 பி, கே.பிரசாந்தினி- ஏபிசி, எம்.சர்மினி- ஏபிசி.

**வணிகப்பிரிவு**

வி.கீர்த்தனா- ஏ2 பி, எஸ்.சரணிதரண்- ஏ2பி.

**பொறிமுறைத் தொழில்நுட்பவியல்**

ஜி.அச்சுதன்- 3 பி (மாவட்ட நிலை-5), எஸ்.நிரோசன்- 3 பி ( மாவட்டநிலை-8), கே.லோஜிதன்- 2பி சி(மாவட்ட நிலை-9), பி.குமரன்- 2 பி சி(மாவட்ட நிலை-17), ஆர்.வைஷ்ணவன்- பிசிஎஸ் (மாவட்ட நிலை -37), ரி.வேணுதர்சிகா- ஏ2சி.

**உயிர்முறைமைத் தொழில்நுட்பவியல்**

ரி.இசைப்பிரியா- 2 பிசி (மாவட்ட நிலை -16), எஸ்.தயாளன், பி 2 சி, பி.சரண்யா- 3சி, என்.கோகுலப்பிரியா- 2 பிசி.

## அகில இலங்கை ரீதியில்...

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரங்கள்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் இரவு, பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் வெளியிடப்பட்டன.

வெளியிடப்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் பௌதீக விஞ்ஞான பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை சேர்ந்த ஸ்ரீதரன் துவாரகன் முதலாமிடத்திற்குத் தெரிவாகியுள்ளார். மேலும் ஏனைய துறைகளில், முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரங்கள் வருமாறு:-

**பௌதீக விஞ்ஞானம்**

1. ஸ்ரீதரன் துவாரகன் – ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.
2. பமுதிதா ஹிமான் சோமாரட்ணே – பண்டாரநாயக்க கல்லூரி, கம்பஹா.
3. ஜெயராஜன் போல் ஜோன்சன் – சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

உயிரியல் விஞ்ஞானம்

1. திலினி சந்துனிகா பலிஹக்கார – சுஜாதா வித்தியாலய, மாத்தறை
2. ஹசிதா கீத் குணசிங்க – ஜோசப் வாஸ் கல்லூரி, வென்னப்புவ.
3. இஷான் லுகா ராமநாயக்க – ஆனந்தாக் கல்லூரி, கொழும்பு.

**வர்த்தகம்**

1. துளனி ரசாந்திகா – சுஜாதா வித்தியாலய, மாத்தறை.
2. கௌசல்யா சுபாஷிணி தாபரே – மியூசஸ் கல்லூரி, கொழும்பு.
3. பாத்திமா அக்கேலா ஈஸ்வர் – சென்ற போல் மகளிர் பாடசாலை, கொழும்பு.

**கலை**

1. வண. பாபீரியிய முனிந்தவான்ச தேரோ – சதர் மாலங்கர பிரிவேனா, இரத்தினபுரி.
2. சஹிலி அகானா விக்கிரமநாயக்க – சி.எம்.எஸ் பெண்கள் கல்லூரி, கொழும்பு
3. தில்கா சப்பாபமா – பேர்குசன் உயர்நிலை பள்ளி, இரத்தினபுரி

**பொறியியல் தொழில்நுட்பம்**

1. பாரிமதி பிரசாதி ரான்சிரினி – மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி, மாத்தறை.
2. பிரகதி இஷான் மதுங்கா – நாரந்தெனிய எம்.எம்.வி., கும்புறுபிட்டிய.
3. பாசிந்து லக்ஷன் – மயூர்பாடா மத்திய கல்லூரி, நாரம்மல.

# வடமராட்சி பாடசாலைகளின் முதன்மைப் பெறுபேறுகள்

வெளியாகியுள்ள பெறுபேறுகளின் அடிப்படையில், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் , கணிதப் பிரிவில் 5 மாணவர்களும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் ஒரு மாணவனும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

சி.துவாரகன், கா.புவிந்தாஸ், ர.ராகவன், இ.கிருஷ்ணலோஜன், த.தயாளூபன் ஆகியோரே கணிதப் பிரிவில் தெரிவாகியுள்ளனர்.த.தயாநிதி என்ற மாணவனே உயிரியல் பிரிவில் தெரிவாகியுள்ளார்.

இவர்களில் தயாளூபன், தயாநிதி ஆகிய இருவரும் சகோதரர்களாவர்.

அதேவேளை, சி.துவாரகன் கணிதப் பிரிவில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இதேவேளை வெளியாகியுள்ள பெறுபேறுகளின் அடிப்படையில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் கணிதப் பிரிவில் இரண்டு மாணவிகளும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 5 மாணவி களும் பல்கலைக்கழகத்திற்குளு; தெரிவாகியுள்ளனர்.

பொன்னுத்துரை – சுஜீதா மற்றும் ஆனந்த மூர்த்தி – சங்கீதா என்ற இரண்டு மாணவிகள் கணிதப் பிரிவிலும், குகநாதன் – துஷ்யந்தி, குமுக்கேசன் – மாதுமை, புவனேந்திரன் – துளசிகா, கிருஷ்ணசிங்கம் – மாதுளா, சிறீபவன் – சுஜீபா ஆகிய 5 பேரும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவிலும் தேர்ச்சி பெற்றுள்ளனர். (இ)

# இராஜாங்க அமைச்சரானார் கமகே மஹிந்த அணிக்குத் தாவினார் லான்சா

கொழும்பு, டிசெ. 29

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன கமகே, நேற்றுக் காலை இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முன்பாக பியசேன கமகே, தென்மாகான அபிவிருத்தி, சட்டம் ஒழுங்கு இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றார்.

அண்மையில் உயர் நீதி மன்றத் தீர்ப்பால் நாடாளு மன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதியிழப்புச் செய்யப்பட்ட கீதா குமாரசிங்கவின் இடத்துக்கு, பியசேன கமகே நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்றிருந்தார்.

அதேவேளை, அண்மையில் பிரதி அமைச்சர் பதவியில் இருந்து விலகிய கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு கூட்டு



எதிரணிக்கு ஆதரவு அளிக்கப் போகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

# ஐ.தே.க. வேட்பாளர்களின் வீடுகளை தாக்கிய 13 பேருக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு, டிசெ. 29

சாய்ந்தமருது பிரதேசத்தில் கல்முனை மாநகர சபைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் வீடுகளைத் தாக்கிய 13 சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கல்முனை நீதிவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை ஒருநாள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கல்முனை மாநகர சபைக்குச் சுயேச்சையாகப் போட்டியிடும் குழுவொன்றின் ஆதரவாளர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் இரண்டு வேட்பாளர்களின் வீடுகளுக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்தனர் எனக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் 13 பேரைக் கைதுசெய்திருந்தனர்.

இந்தத் தாக்குதலில் வீடுகளின் ஜன்னல் கண்ணாடிகள், மின் விளக்குகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன என நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?"

388

தொகுப்பு: பொன்.வேணுகிருஷ்ணா

அரசியல்ரீதியில், ஜனநாயகக் கட்சி அது முன்னர் சம்பந்தப்பட்டிருந்த சமூக சீர்திருத்தத்திலிருந்து துண்டித்துக் கொண்டுள்ளது. இக்கட்சி, வோல் ஸ்ட்ரீட், இராணுவம்/உளவுத்துறை எந்திரம் மற்றும் உயர்மட்ட நடுத்தர வர்க்கத்தின் கட்சியாக, அடையாள அரசியலின் அடிப்படையில் அமைந்




துள்ளது. இது கிளிண்டன் பிரசாரத்தில் உச்சத்தை அடைந்தது. அப்பிரசாரம் சமூக சமத்துவமின்மை மற்றும் போர் போன்ற பிரச்சினைகளை ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழக மாணவர் புரோக் டர்னெர் வழக்கின் மீது கடும் தண்டனைக்கான சட்ட-ஒழுங்கு கோரிக்கையாக ஊக்குவித்து, போர் மற்றும் சமூக சமத்துவமின்மைக்கான பெரிய எதிர்ப்பை திசைதிருப்ப முயன்றது. ஜனநாயகக் கட்சி பிரசாரத்தை ஆதரிக்காத தொழிலாளர்களை அவமானப்படுத்துவதுடன் இணைந்திருந்த இது, வெள்ளை இன ஆண்களின் 'தனிச்சலுகை' என்று கூறப்பட்டன. இப்பிரசாரத்தின் பிற்போக்குத்தனமான மூலோபாயம், இப்போது ட்ரம்ப் நிர்வாக உள்ளடக்கத்தில் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு வருகின்றது.

பாலியல் ஒழுக்கக்கேடு என்று கூறப்படுவதன் மீதான பிரசாரம், ஓர் அணுஆயுத பேரழிவைக் கட்டவிழ்த்து விடக் கூடிய அதிகரித்து வரும் போர் அச்சுறுத்தல்களின் பின் புலத்தில் கட்டவிழ்ந்து வருகிறது. பணக்காரர்களுக்கு ஒரு பெரிய வரி வெட்டு செய்ய காங்கிரஸ் துரிதமாக நகர்ந்து வருகின்ற நிலையில், ஒரு கண்ணியமான வேலைக்கான எந்த சாத்தியக்கூறும் இன்றி மலைப்பூட்டும் வறுமை மட்டங்களை எதிர் கொண்டு வரும் தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களின் விகிதம் அதிகரித்து வருகிறது. வேலை சம்பந்தமான விபத்துக்கள் மற்றும் நோய்களால் ஒவ்வொரு நாளும் 115 தொழிலாளர்கள் உயிரிழக்கிறார்கள். இணைய நடுநிலையைக் கைவிடுவது என்ற ட்ரம்ப் நிர்வாகத்தின் முடிவால் எடுத்துக்காட்டப்பட்டதைப் போல, ஆளும் வர்க்கம் ஜனநாயக உரிமைகள் மற்றும் இணைய வழி சுதந்திர பேச்சுரிமையை அழிப்பதற்கு நகர்ந்து கொண்டிருக்கிறது.



**இவை அனைத்தும் பாலியல் முறைகேடு மீதான பிரசாரத்தில் கைவிடப்பட்டு வருகின்றன. பெண்களின் வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல், எல்லா பெண்களும் ஆண்களால் ஒடுக்கப்படும் ஒரே மாதிரியான 'அனுபவத்தை' பகிர்ந்து கொள்கின்றனர் எனவும், ஆண்கள், அதுவும் குறிப்பாக வெள்ளை இன ஆண்கள், 'தனிச்சலுகையின்' ஆதாயத்தை அனுபவிக்கின்றனர் எனவும் கூறப்படும் வாதங்களுக்கு அடியில் வர்க்கப் பிளவுகள் மூடி மறைக்கப்படுகின்றன.**

பாலியல் முறைகேடு பிரசாரமானது. வலதுசாரி, ஜனநாயக விரோத மற்றும் அரசியல்ரீதியில் பிற்போக்குத்தனமான பிரசாரமாகும். இதற்கும், ஆண் ஆகட்டும் அல்லது பெண் ஆகட்டும். தொழிலாளர்களின் நலன்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

ட்ரம்ப் நிர்வாகம் மற்றும் ஒட்டுமொத்த அரசியல் ஸ்தாபகத்திற்கு எதிரான எதிர்ப்பானது முதலாளித்துவத்திற்கு எதிராக மற்றும் இந்த அமைப்பு முறை கொண்டு வருகின்ற கொடூரங்களுக்கு எதிராக நனவு பூர்வமாக திருப்பி விடப்பட்ட தொழிலாள வர்க்கத்தின் ஒரு சுயாதீனமான இயக்கமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

## ஆஸ்திரிய அரசினுள் அதிவலது சுதந்திரக் கட்சி (FPO)

ஆஸ்திரிய அரசாங்கத்தினுள் அதிவலது சுதந்திரக் கட்சி (FPO) உள்நுழைந்திருப்பது ஒட்டுமொத்த ஐரோப்பாவிலும் ஓர் அரசியல் திருப்பு முனையைக் குறிக்கிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய கால கட்டத்தில், ஹிட்லரின் மூன்றாம் ரைஹ் இன் குற்றங்களைத் தொடர்ந்து பாசிசவாத-எதிர்ப்பானது உத்தியோக பூர்வ அரசு சித்தாந்தத்தின் தூணாக மாறியிருந்த மேற்கு ஐரோப் பாவின் பாகமாக பாரம்பரியமாகப் பார்க்கப்பட்டு வந்த ஒரு நாட்டில், நவ-நாஜி சூழலை கொண்ட அதி தீவிர வலது வட்




டாரங்களுடன் நெருங்கிய தொடர்புள்ள அரசியல்வாதிகள் அதிகாரத்திற்கு வந்துள்ளனர். பொலிஸ், இராணுவம் மற்றும் உளவுத்துறை சேவைகள் அனைத்தும் FPO அமைச்சர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன.

**பழமைவாத ஆஸ்திரிய மக்கள் கட்சி (OVP) முதன் முதலில் 17 ஆண்டுகளுக்கு முன்னர், அப்போது ஜோர்ஜ் ஹைடர் தலைமையில் இருந்த FPO உடன் ஒரு கூட்டணி அரசாங்கம் அமைத்த போது, அது போராட்டம் மற்றும் சீற்றத்தின் ஒரு சர்வதேச அலையைத் தூண்டியது. ஐரோப்பிய ஒன்றியம் வியன்னா மீது தடையாணைகள் விதித்தது. இம்முறை, அதுபோன்ற எதுவும் நடக்கவில்லை. அதற்குப் பதிலாக, புதிய அரசாங்கம் பாராட்டுக்கள் மற்றும் ஆதரவைப் பெற்றுள்ளது.**

'FPO ஐரோப்பிய அரசியலின் முதன்மை போக்கில் இணைகிறது' என்று வியன்னாவின் Der Standard எழுதியது. சுவிஸ் பத்திரிகை நேர Zürcher Zeitung அந்தஅரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை 'வலதுசாரி பழமைவாதத்தின் ஒரு சில அடையாள கொள்கைகள் என்றும், ஆனால் ஒட்டு மொத்தமாக உறுதியான மற்றும்




நல்ல அணுகுமுறைகளாக' வர்ணித்தது. Frankfurter Allgemeine Zeitung ஐ பொறுத்தவரையில், புதிய அரசாங்கம் 'அனைத்திலும் முதலாவதாக வழமையான ஜனநாயகத்தின் ஒரு பாகையில்' உள்ளது. அந்த அரசாங்கத்தை விரும்ப வேண்டும் என்பது அவசியமில்லை. ஆனால், அது மதிக்கப்பட வேண்டும்' என்பதை அது சேர்த்துக் கொண்டது.



(கேள்வி தொடரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 50

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்.
கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர்.
அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது.
'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



பாண்டிச்சேரி விழாவில் முதற் பங்கேற்பு 1988

### கடன்பட்டார் நெஞ்சம் - மா. தவயோகராஜா

யாழ். கம்பன் கோட்டம் கட்டப்பட்டுக் கொண்டிருந்த வேளை அது. மனவூக்கத்தால் மட்டும் வேலைகளைத் தொடங்கியதால், கையில் பணமில்லாமல் இடையில் இடர்ப்பட்டோம். தொடர்ந்தும் கட்டட வேலையை முன்னெடுக்க முயன்றோம். அக்காலகட்டத்தில் கவிஞர் சோ.ப. எங்களோடு மிக நெருங்கியிருந்தார். அது பற்றி முன் சொல்லியிருக்கிறேன். லண்டனிலிருந்து உழைத்து மிச்சப்படுத்திய பணத்தை, சோ.ப வட்டிக்கு கொடுக்கும் படி எம்மிடம் அனுப்பி வைத்தார். அக் காலத்தில் சி.வி.கே. சிவஞானம் அவர்கள், எங்கள் கட்டட நிதிக்காக, மாநகரசபை ஊழியர்களிடம் பணம் சேர்த்திருந்தார். அப்பணம் வந்ததும் கடனைக் கொடுக்கலாம் என நினைத்து, சோ.பவின் பணத்தை (கிட்டத்தட்ட முப்பத்தையாயிரம்), வட்டிக்குப் பெற்று கம்பன் கோட்ட வேலைகளைச் செய்தேன். சி.வி.கே. அவர்கள் சேர்த்த பணம் எங்கள் கைக்கு வராமற்போயிற்று, அந்த விவரத்தை முன்னரே சொல்லியிருக்கிறேன். வருமென்று நினைத்த அந்தப் பணம் கைக்கு வராததால் கடனாளிகளானோம். சோ.பவின் கடன் ஏறிக்கொண்டே போயிற்று. நாளடைவில் வட்டிக்கும் வட்டி போட்டு சோ.ப. கணக்கிட, கடன் தொகை பெரிதாயிற்று, ஒருநாள் மகனை வெளிநாடு அனுப்பவென, சோ.ப. தனது முழுத்தொகையையும் உடன் தரும்படி கேட்க, (கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம்) செய்வதறியாது நான் திகைத்தேன். அவரைச் சமாளிக்கவென, கொழும்பு சென்று தெரிந்த ஒருவரிடம் பணம் பெற்று வருவதாய்க் கூறி, நானும் இரத்தினகுமாரும் திருநந்தகுமாரும் புறப்பட்டோம். கொழும்பில் எங்களுக்கு அப்போது யாரையும் தெரியாது. மாணிக்கத்துடன் தொடர்பு கொண்டு அவர்களின் உறவினரான, 'வி.மாணிக்கம் பிரதர்ஸ்' உரிமையாளர், திரு. தவயோகராஜா அவர்களைச் சந்திக்க, நானும் திருநந்த குமாருமாகச் சென்றோம். எனக்கு நேரடியாக அப்போது அவரைத் தெரியாது. மாணிக்கமும் கந்தசாமியும் எங்களை அவரிடம் அழைத்துச் சென்ற போதும், அவர் மேல் இருந்த பயபக்தியால், அவர்கள் பேசத் தயங்கி, மௌனித்து நின்றனர். அறிமுகமில்லாத அவரிடம் நான் கடன்பட்ட கதையைச்சொல்லி, அதை யாரேனும் தீர்த்து வைத்தால் வருங்கால இளைஞர்களை வன்முறையில் இருந்து விடுவித்து நல்வழிப்படுத்த என்னால் வழிகாட்ட முடியும் எனக்கூறி, தயங்கித் தயங்கி உதவி கோரினேன். மௌனமாக என் கதையைக் கேட்ட அவர், வேறு யாரெல்லாம் உங்களுக்கு உதவ இருக்கிறார்கள் என வினவினார். ஒரு சில பெரிய மனிதர்களின் பெயரைச் சொல்லி, அவர்களிடமும் செல்ல இருப்பதாகப் பொய்யாய்ச் சொன்னேன். பத்தாயிரம் ரூபாவாவது தருவார் என்று நம்பிக்கை இருந்தது. அவர் எதுவும் பேசாமல் நான் சொன்னதைக் கேட்டார். ''ஒருவரிடமும் கை நீட்டப் போக வேண்டாம். இரண்டு நாள் கழித்து என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள்'' என்று சொல்லி, எங்களை வழியனுப்பி வைத்தார். அடுத்த நாள் வரை அவரிடமிருந்து பதிலேதும் இல்லை. என்ன செய்வதென்று தெரியாத நிலை. ஜே.வி.பி. இயக்கம் கொழும்பில் அட்டூழியம் செய்து கொண்டிருந்த நேரமது. அவர்கள் மறுநாள் திடீரென கடைகளை மூட உத்தரவிட்டனர். அச்சூழ்நிலையால் பயந்து நாம் மீண்டும் யாழ். செல்ல முடிவு செய்தோம். போகுமுன் தவயோகராஜா அவர்களிடம், அவர் கடையிலிருந்தே தொலைபேசியால் தொடர்பு கொண்டேன். என்னிடம் பேசி விட்டு, கடை மனேஜரிடம் தொலைபேசியைக் கொடுக்கச் சொன்னார். மனேஜர் பேசிய பின் தொலைபேசி மீண்டும் என் கைக்கு வந்தது. தவயோகராஜா பேசினார். '' இரண்டு இலட்சம் ரூபா தரச்சொல்லியிருக்கிறேன், உங்கள் முழுக்கடனையும் கொடுங்கள். உங்களால் நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது'' என்று சொல்லி, போனை வைத்தார். உடன் என் கையில் ஒன்றரை இலட்சம் ரூபா பணம் தரப்பட, நான் திகைத்த திகைப்புக்கு ஓரளவில்லை. அன்று இரவு முழுவதும் அழுதேன். அன்று அந்தப் பணம் கிடைத்திருக்காவிட்டால், தற்கொலை செய்யலாமோ என்று கூட நினைத்து இருக்கிறேன். தவயோகராஜா என்னையும் கழகத்தையும் அன்று உயிர்ப்பித்தார். பின் சோ.பவின் கடனைத் தீர்த்தேன். வட்டியைச் (குட்டி) சிறிது குறைத்ததற்கு, தன்னிடம் வாங்கிய பணம் கழகத்திற்குத்தான் செலவழிக்கப்பட்டது என்பதற்கு, என்ன சாட்சி? என்று கேட்டு சோ.ப. எனக்குக் கடிதம் எழுதினார். அக்கடிதத்தை படித்துக் கோபத்தில் ரகுபரன் அழுதது, இன்றும் எனது மனதில் நிற்கிறது. பிற்காலத்தில் சோ.ப. எங்களோடு பகைத்து பொன். சுந்தரலிங்கத்தோடு இணைந்து எங்கள் விழா நிகழ்ச்சிகளைப் புறக்கணித்தார். ஆனாலும், முற்றாய்ப் பகைக்காமல் இன்றும் அவர் தொடர்பை நாம் பேணுகிறோம்.

★ ★ ★

### டொமினிக் ஜீவா

முற்போக்கு அணியைச் சேர்ந்தவரான இவர், மல்லிகை சஞ்சிகையின் ஆசிரியராவார். தான் செய்த சவரத் தொழிலை விட்டுவிட்டு, ஆண்மையோடு இலக்கியப் பணியாற்ற வந்த பெருமனிதர் இவர். மதுரைத் தமிழாராய்ச்சி மாநாட்டில் என் உரையைக் கேட்டு, என்னில் அன்பு பூண்டவர். 1985 இல் எங்களோடு தொடர்புகொண்டார். எங்களுடனான இவரது நட்பு மெல்ல மெல்ல வளர்ந்தது. கருத்தியலில் வேறுபாடு கொண்டிருந்த பொழுதும், இலக்கிய ஈடுபாடு, சமூக அக்கறை என்பவற்றால், எம்மோடு மிக நெருங்கியிருந்தார் அவர். எம்மேல் அவர் கொண்ட அன்பு பின் உறவாய் நெருங்கிற்று. யாழ்.கோட்டை தாக்கப்பட்ட போது, யாழ்ப்பாணம் இராணுவ விமானத் தாக்குதலால் அதிர்ந்தது. அப்போது இவர் எங்கள் கழகத்திலேயே சில காலம் எம்மோடு தங்கினார். இவரது ஒரே மகனான திலீபனின் திருமணப் பதிவு, எங்கள் யாழ்.கம்பன் கோட்டத்திற்தான் நடைபெற்றது. இன்று திலீபன் கொழும்பில் நல்ல நிலையில் இருக்கிறான். அவனது மகளுக்கும் திருமணமாகி விட்டது. வியாபாரத் தொடக்கம், வீடு குடி புகுதல், மகளின் திருமணம் என, தன் வீட்டு எல்லா நன்முயற்சிகளுக்கும், என்னை அழைப்பதை அவன் வழக்கமாய்க் கொண்டிருக்கிறான். குமாரதாசனுக்கும் எனது தங்கைக்கும் நடந்த திருமணப் பதிவில், ஜீவாதான் முதலில் சாட்சிக் கையெழுத்திட்டார். யாழ். கம்பன் கோட்டத்திற்கு அடிக்கல் நட்டவர்களில் இவரும் ஒருவர். கழக வளர்ச்சியைக் கண்டு உள்மகிழும் மனிதர். கழக இளைஞர்களை உலகத்திற்கு இனங்காட்டி எப்போதும் ஊக்குவிப்பவர். 1995 இன் பின் இவரும் எம்மோடு கொழும்பிற்கு இடம் பெயர்ந்தார். எங்களைப் போலவே, சோர்வுராமல் தன் இலக்கியப் பணியைக் கொழும்பிலும் பல காலம் ஆற்றினார். எங்கள் கம்பன் விழாக்கள் ஒன்றினையும் தவறவிடமாட்டார். எங்களோடு வந்து பாண்டிச்சேரி கம்பன் விழாவிலும் ஒருமுறை கலந்து கொண்டார். இவரது கொள்கை அணி சார்ந்தோர், கம்பன் கழகத்துடனான இவரது தொடர்பை அதிகம் விரும்பாத போதும், அதுபற்றி எதுவித கவலையும் இல்லாமல் எம்மைத் தொடர்ந்து நேசித்தார். யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்திலேயே, எனது படத்தை தனது மல்லிகை அட்டையில் போட்டு, மரியாதை செய்தார். பலதரம் இவரும் நானும் கருத்தளவில் முரண்பட்டு இருக்கிறோம். ஆனாலும், எங்களின் அன்பு குறைந்ததில்லை. இன்று தனது இலக்கியப் பணியை நிறுத்தி, பற்றற்று வாழ்ந்து வருகிறார். ஆனாலும் எங்கள் மேல் அவர் வைத்த பற்றுத் தொடர்கிறது.

★ ★ ★

### எழுத்தாளர் பிரேம்ஜி

ஜீவாவைப் போலவே முற்போக்கணியைச் சேர்ந்த வேறுசிலரும், எங்களை உண்மையாய் நேசித்தனர். அவர்களுள் பிரேம்ஜி முக்கியமானவர். இவரும் ஒரு முற்போக்கு எழுத்தாளர். முற்போக்கு அணியின் தலைவராய் இருந்தவர். கொமியூனிஸ் கட்சிகளுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தார். தேசம் பற்றியும், தமிழ்ச் சமூகம் பற்றியும் அதிக அக்கறை கொண்டவர். எளிமையானவர். எதையும் நிதானித்துச் செய்பவர். யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட ஒரு சந்திப்பை வைத்து, எங்களின் உறவைத் தீர்மானித்தவர். எங்கள் மேல் பெரும் நம்பிக்கை வைத்திருந்தார். பின்னாளில் கனடா சென்று தங்கினார். அங்கிருந்து அவர் எமக்கு எழுதிய ஒரு கடிதத்தை, எங்கள் கோப்புக்களில் பொக்கிஷமாய்ப் பாதுகாத்து வருகிறோம். பின்னாளில் கொழும்பில் நடந்த எங்கள் கம்பன் விழாவில், இவரைக் கௌரவித்தோம்.

★ ★ ★

### எழுத்தாளர் தெணியான்

எம்மேல் அன்பு செய்த மற்றொரு முற்போக்கு எழுத்தாளராக, தெணியான் விளங்கினார். அவரும் முற்போக்கு அணி சார்ந்தோரின், எம்மைப் பற்றிய கருத்துக்களை நிராகரித்து, எம்மை அங்கீகரித்த ஒருவராவார். எமது கழகம் பிரிவுகளை விலக்கி அனைவருடனும் ஒன்றிணைந்து நின்றது, என்பதற்கு மேற்பெரியோர்களுடனான எமது உறவு ஒரு சான்று.

(தொடரும்...)




தேசிய மீலாத் விழாவையொட்டி மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி முன்பாக ஆரம்பித்து வைக்கப்பட்ட போது... (இ-19)




இணுவில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு பிரிவுக்கு நல்லூர் றோட்டறிக் கழகத்தால் அண்மையில் ஒரு பகுதி இலத்திரனியல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் இணுவில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு பிரிவின் வைத்தியர், பணியாளர்கள் மற்றும் நலன்புரிச் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (இ







யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஒளி விழாவில் பிரதேச செயலர் பொன்னம்பலம் தயானந்தன் பரிசு வழங்குகிறார்... (இ-19)

# ஜே.வி.பி. இனவாத அமைப்பா?

## நல்லூர் பிரதேச சபையின் ஜே.வி.பி. முதன்மை வேட்பாளர் கேள்வி



ஞானமுத்து அன்ரன் சாள்ஸ்

வடக்கு- கிழக்கு இணைப்பை எதிர்க்கும் மக்கள் விடுதலை முன்னணியினருக்குத் தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்பதற்கு என்ன யோக்கியதை இருக்கிறதெனக் காலம் காலமாகத் தமிழ்க் குறியீட்டு அரசியல் கட்சிகளை இயக்கி அக் குறியீட்டின்பால் தேசத்தின் பொது முதலாளித்துவ நலன்களையும், அமெரிக்க ஏகாதிபத்திய நலன்களையும் பேணி வரும் அரசியல்வாதிகளும் அவர்களின் அடியாளர்களும் தற்போது அட்டகாசமாக வினாத்தொடுத்து வருகின்றனர்.

இத் தனித் தமிழ் அரசியல் வித்தகர்கள் தான் இறுதியாக இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஆதிக்கப் பலப் பரீட்சையின் போது தமிழ் மக்களின் சுயமரியாதைக்கும் அவர்களுடைய அரசியல் உரிமைகளுக்காகவும் தம்மால் எழுப்பப்படும் குரல் போலித்தனமான ஒன்றென்பதைப் புரிந்துகொள்ளக் கூடியதாகத் தமிழ் மக்களை ரணில் தரப்பினருக்கு வாக்களிக்கும் படி வேண்டிநின்று அதில் மகத்தான வெற்றியும் பெற்றதோடு தமிழ் மக்களின் சுதந்திரமான வாழ்வைவிடத் தமதும் தங்களுடைய சிங்கள முதலாளித்துவ நலன் பேணும் சகாக்களினதும் வர்க்க நலன் மேம்பட்டதென்னும் வழமையான உண்மையை மீண்டும் ஒருமுறை அம்பலப்படுத்தியும் இருந்தார்கள்.

இதைவிட மிகவும் பரிதாபமான தனித் தமிழ் அரசியலின் வங்குரோத்து யாதெனில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தானைத் தலைவர்களில் ஒருவரான மாவை சேனாதிராசா, நாங்கள் தமிழ் மக்களை ரணில் - மைத்திரி கூட்டணிக்கு வாக்களிக்கும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களும் அக்கூட்டணிக்கு வாக்களித்து அதிகாரத்தில் அமர்த்தியமைக்கு நன்றிக் கடனாக, ஆட்சி பீடமேறிய ரணில் - மைத்திரி அரசு தமிழ் மக்களின் பிரச்சினைகளை நிச்சயமாகத் தீர்த்து வைக்குமெனச் சப்பைக் கட்டுக் கட்டித் தமது கையாலாகாத் தனத்தையும் வெளிக்காட்டி இருந்தார் கள்.

மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த எமது அடிப்படை அரசியல், இலங்கையில் தொழிலாளர் ஆட்சியைக் கம்யூனிஸ்ட் நெறியிலான அதிகாரத்தை அமுலுக்குக்கொண்டு வருவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினையையும், சிறுபான்மையினப் பிரச்சினையையும் ஒருசேரத் தீர்ப்பதாகும்.

எனவே, மக்கள் விடுதலை முன்னணி வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்ப்பது, தமிழ் மக்களுக்கு எதிரான இன வாதப் போக்கெனவும், அக்கட்சி இனவாதக் கட்சியெனவும் விஷமப் பிரசாரம் செய்வது அப்பட்டமான அரசியல் அபத்தம் என்றே கருதப்பட வேண்டும்.

தற்போது, உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் இடம்பெறவிருப்பதால் வடக்கு - கிழக்கு இணைப்பைப் பெரிதுபடுத்தி மக்கள் விடுதலை முன்னணியை இனவாத அமைப்பெனக் கொக்கரிக்கும் தனித் தமிழ் அரசியல் விற்பன்னர்கள் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின்போது வடக்கு - கிழக்கு இணைப்பை வலியுறுத்திப் பேச்சளவில் மட்டும் முடிவுக்குக் கொண்டுவந்திருந்தமையையும் யாவரும் அறிவர்.

இவ்வாறாக மஹிந்தவுடைய அரசாங்கத்திலே பேச்சளவோடு நின்றுகொண்ட வடக்கு கிழக்கு இணைப்பு விடயத்தைத் தமது ஆதரவோடு அதிகாரத்திற்கு வந்த மைத்திரி - ரணில் ஆட்சியில் பேசாமலேயேவிட்டுத் தமது வர்க்கத்திற்கு நலன் பயக்கும் வழமையான சேவையைக் கனகச்சிதமாகச் செய்து கொண்டிருந்தார்கள்.

1987 இற்கு முன்னர் இலங்கையில் 9 மாகாணங்களே காணப்பட்டன. அக்காலத்தில் காணப்பட்ட தமிழ் அரசியல் மற்றும் போராட்டக்காரர்களே ஏற்காத அந்த வடக்கு கிழக்கு இணைப்பு ராஜீவ் - ஜெயவர்தன மீது பலவந்தமாக இந்தியாவின் நன்மைக்காக திணிக்கப்பட்ட ஒப்பந்தம் மூலமே தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டது என்பதை யாவரும் அறிவர். அதன் பின்னரே மக்கள் விடுதலை முன்னணியினரால் பிரிக்கப்படக்கூடாத நாடு என்ற அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதே உண்மை.

மக்கள் விடுதலை முன்னணி முழு நாடும் தமிழ் மக்களுக்குச் சொந்தம் என்ற நிலைப்பாட்டில் உள்ள கட்சியாகும். நாடுகள் இன, மத, அடிப்படையில் பிரிக்கப்படுவதால் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது, என்ற நிலைப்பாட்டையும், தமிழ், சிங்கள, முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து மக்களும் ஒன்றாய் வாழும் நாடே தேவைப்படுகிறது. ஆனால் முதலாளித்துவ இனவாத, மதவாத, அடிப்படைவாத கட்சிகளுக்கே நாட்டுப் பிரிவினை தேவைப்படுகிறது என்பதே உண்மை.


தற்போது உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நெருங்கும் இத் தருணத்தில் வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பிலான மக்கள் விடுதலை முன்னணியினராகிய எமது நிலைப்பாட்டைப் புரிந்தும் புரிந்துக்கொள்ளாதவர்கள் போல எம்மீது இனவாதச் சாயம்பூசித் தமிழ் மக்கள் பார்வையில் நம்மைத் தவறான முறையில் சித்திரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

உழைப்பாளர்களின் அதிகாரத்தைக் கொண்ட பொதுவுடைமை அரசொன்றை இலங்கையில் நிர்மாணிப்பதற்கு அயராது உழைத்துவரும் மக்கள் விடுதலை முன்னணியினரின் வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பான நிஜமான நிலையைத் தமிழ் மக்கள் புரிந்துகொண்டு, தமிழ்த் தேசியத்தின் பெயரால் இலங்கை முதலாளித்துவத்திற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் முண்டுகொடுத்துவரும் தமிழ்க் குறியீட்டுக் கட்சிகளையும் அரச அடிவருடிகளையும் முற்றுமுழுதாக நிராகரித்து அம்முன்னணியினரின் சின்னமான மணிக்கு வாக்களித்து முன்னணியை வெற்றிவாகை சூடவையுங்கள்.

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நல்லூர் பிரதேச சபையின் முதன்மை வேட்பாளர் ஞானமுத்து அன்ரன் சாள்ஸ் கேட்டுள்ளார்.

(இ

12) கல் ஒன்றை புரட்டுவதற்கு நெம்பு கோல் ஒன்றினைக் ஓர் சிறிய மரக்கட்டையினையும் கொண்டு மிக இலகுவாக புரட்டக்கூடிய உரு எது?



(1) (2) (3) (4)


13) நீர் நிறைந்த கண்ணாடிப் பாத்திரம் ஒன்றில் ஐஸ்கட்டி ஒன்றினைப் போட்டால் நிற்கும் சரியான நிலை.



(1) (2) (3) (4)

14) பித்தப்பை இல்லாத பறவை - 1) காகம் 2) மைனா 3) நேசப்பறவை 4) புறா


15) பின்வருவனவற்றுள் உலோகத்தினால் செய்யப்பட்ட இசைக்கருவி



(1) (2) (3) (4)

16) ஒரு கண் மணியை மட்டும் கொண்ட பறவை.
1) வௌவால் 2) காகம் 3) கொக்கு 4) கிளி

17) பின்வரும் குறியீடு உணர்த்துவது



1) பாதணியுடன் வரவும் 2) பாதணிகள் தேவையிலை
3) பாதணிகளுடன் வரவேண்டாம் 4) பாதணிகள் இல்லை

18) பானம் தயாரிக்கக் கூடிய பூ
1) தாமரை 2) செவ்வரத்தை 3) மல்லிகை 4) செவ்வந்தி

19) போக்கு வரத்துடன் தொடா் பற்றது - 1) குதிரை 2) பஸ் 3) கப்பல் 4) தபால்

20) மலசல கூடம் சென்ற பின் கைகழுவ பயன்படுத்த வேண்டியது?
1) மண்ணெண்ணெய் 2) குளோரின் 3) ஓடிக்கலோன் 4) சவர்க்காரம்

21) காய்க்காத தாவரம்
1) வாழை 2) ஜம்பு நாவல் 3)வெற்றிலை 4) கமுகு

22) பாடசாலையில் கல்வி கற்ற ஒருவர் தான் கல்வி கற்ற காலத்தை உறுதிப்படுத்த நாட வேண்டியவர்
1) கிராம சேவையாளர் 2) பாடசாலை அதிபர் 3) பெற்றோர் 4) கல்வித் திணைக்களம்



23) ஒருவர் உடனடியாக செய்தி ஒன்றை வேறொருவருக்கு வழங்க வேண்டும் எனின் பயன்படுத்தக் கூடிய சாதனம்
1) கடிதம் 2) கைத்தொலைபேசி 3) தந்தி 4) தொலைக்காட்சி

24) கோடைகாலத்தில் வெய்யிலின் தாக்கத்தில் இருந்து உடலை பாதுகாக்க உடலில் பூசவேண்டிய சாறு.
1) பழச்சாறு 2) ஓயில்மென் 3) கற்றாளைச்சாறு 4) பனங்கற்றாளைச்சாறு

25) முதியவர் ஒருவர் அரசினால் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையினை பெறக் கூடிய தொழில்
1) மேசன் 2) கடற்தொழில் 3) ஆலய பூசாரி 4) ஆசிரியர்

26) கட்டட வேலை செய்யும் ஒருவர் பயன்படுத்தும் கருவி
1) அலவாங்கு 2) சாந்தகப்பை 3) உளி 4) அரிவாள்

பின்வரும் பொருட்களின் பெயரை எழுதுக.

27)  28)  29)  30) 

............ ............ ............ ............

(30x1=30 புள்ளி)



# கல்விக்கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் 4

யோ.யஸ்ரின் யேர்னாட் B.Ed., M.Ed. பகுதி II

நேரம்- 1 மணி 45 நிமிடம்

**01. பந்தியை வாசித்து விடை தருக.**

தீபன் விறகு வெட்டியின் மகன். துணிவுள்ள சிறுவன் ஒரு நாள் தந்தை மகனிடம் "மகனே! விறகு வெட்டி வருவோம் காட்டுக்கு வா" என்று அழைத்தார். இருவரும் விறகு வெட்ட காட்டிற்குள் சென்றனர். செங்கதிரோன் மெல்ல மெல்ல மேற்கில் இறங்கத் தொடங்கி விட்டான். விறகு வெட்டிய தந்தை களைப்பால் சிறிது நேரம் உறங்கி விட்டார். தீபன் மெதுவாக எழும்பி காட்டைச் சுற்றிப் பார்க்க நடந்தான்.

1. தீபன் தந்தையுடன் எங்கே சென்றான் ............
2. ஒற்றைக் கொம்பும் இரட்டைக்கொம்பும் அரவுங் கொண்ட சொல் ஒன்றை தருக. ............
3. இணைமொழி ஒன்று தருக. ............
4. சூரியன் என்பதன் ஒத்த சொல் யாது? ............
5. ஆண்பால், உயர்திணை, ஒருமை, வினைச்சொல் ஒன்று தருக. ............
6. 'துணிவுள்ள' என்பதைப் பிரித்து எழுதுக. ............

(6x1=6 புள்ளி)

**02. கீழே தரப்பட்ட கூட்டினுள் இருந்து பொருத்தமான சொல்லை தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.** (மகன், வருவோம், வை, மேசை, அலைந்தன)

1. தன்மை, பலர்பால், உயர்திணை, வினைச்சொல் ............
2. அஃறிணை, ஒருமை, படர்க்கை, பெயர்ச்சொல் ............
3. ஓர் எழுத்துச் சொல் ............
4. பலவின்பால் வினைச்சொல்............

(4x1=4 புள்ளி)

**03. வாக்கியம் அமைக்குக.**

1. சல சல - ............
2. குடு குடு - ............

(2x1=2 புள்ளி)

**04. புள்ளிக்கோட்டில் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1. வீரன் மாவரைத்து ............ நடாத்தும் ஒருவன். (வாழ்க்கை, வாள்க்கை)
2. என் மீது யாரும் ............ கொள்ளார். (பொராமை, பொறாமை)
3. மதன் மரத்தின் பின்னே ............ இருந்தான். (மறைந்து, மரைந்து)

**05. பின்வரும் வாக்கியத்தின் வரிகளை நிரப்புக.** (3x1=3 புள்ளி)



1. தலையை சீவினால் ............ தீர்ப்பான்.
2. அலை மோதும்போதே ............
3. காலையில் சூரியன் கிழக்கில் ............

**06. பின்வரும் கருத்துக்கு உரிய பழமொழிகள் எழுதுக.** (3x1=3 புள்ளி)

1. முயற்சி செய்பவர்கள் அவமானங்களை சந்திக்க மாட்டார்கள். ............
2. இதனை செய்தாலும் அளவறிந்து செய்தல் வேண்டும். ............

(2x2=4 புள்ளி)

**07. பின்வரும் படங்களை அவதானித்து அதன் ஆங்கில சொல்லினை எழுதுக.**

............ ............ ............

(3x1=3 புள்ளி)

**08. ஆங்கில வாக்கியங்களுக்கு உரிய கருத்தை தமிழில் எழுதுக.**

1. Good evening - ..............................
2. Lets go home - ..............................
3. Please be silent - ..............................

**09. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் புள்ளிக்கோட்டில் எழுதுக.** (3x1=3 புள்ளி)



ஒபகே சபசனி(ப்)ப கொஹொமத

..............................

ஹொந்தின் இன்னவா

..............................



(2x1=2 புள்ளி)

**10. பின்வரும் வாக்கியங்களுக்குரிய கருத்தை சிங்கள உச்சரிப்பில் தமிழில் எழுதுக.**

1. உங்கள் பெயர் என்ன? ..............................
2. பால் குடிக்க ..............................

**11. "எமது நாடு மிகவும் அழகானது" என்ற தலைப்பில் மூன்று வாக்கியம் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.**

1) ..............................
2) ..............................
3) ..............................

**12. பின்வரும் வினாக்களுக்கு விடையினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| 6 | 9 | 0 | 8 |
|---|---|---|---|

1) ஆகிய எண் அட்டைகளைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண் ..............................

2) 9 0 9 0 1 என்பதை சொற்களில் எழுதுக.

..............................

3) IV + IX = .............................. உரோம இலக்கத்தில் விடை தருக


4) ஒரு கூடையில் 369 பூக்களும் வேறோர் கூடையில் 963 பூக்களும் உள்ளன. இரண்டு கூடைகளிலும் உள்ள பூக்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

5) யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட பேருந்து 64 பயணிகளுடன் பயணித்து கிளிநொச்சியில் 28 பேர் இறங்க 6 பேர் ஏறிக்கொண்டனர் மேலும் 9 பேர் இறங்கி 12 பேர் ஏறினர். இப்போது பேருந்தில் இருக்கும் பயணிகள் எத்தனைபேர்? ..............................

6) வியாபாரி ஒருவர் ரூ. 36.00 க்கு வாங்கிய தேங்காயினை ரூ. 40 இற்கு விற்கனை செய்தார். இவ்வாறு 40 தேங்காய்களினை விற்பனை செய்த வியாபாரிக்கு கிடைத்த இலாபம் எவ்வளவு?


..............................

7) மூன்று பேனாக்களின் விலை ரூ. 39.00 எனின் 7 பேனாக்களின் விலை யாது? ..............................

8) 

சமபக்க எண்கோண வடிவிலான உள்ளக விளையாட்டுத் திடல் வடிவமைக்கப்பட்டது. அதன் ஒரு பக்கம் 9m நீளம் எனில் அத்திடலின் சுற்றளவு யாது? ..............................


9) மேலே அமைக்கப்பட்ட உள்ளக விளையாட்டுத் திடலில் ஒவ்வொரு மூலைகளிலும் இரண்டு மின்குமிழ்கள் பொருத்தப்பட்டன. திடலில் பொருத்தப்பட்டிருந்த மின்குமிழ்கள் எத்தனை.

10. 

A


இவ்விடத்தில் சுற்றளவு 35cm இவ்வட்டத்தினை உருட்டும்போது புள்ளி A ஆனது மேலும் 3 தடவை தரையில் படும்படி உருட்டினால் உருட்டப்பட்ட அளவின் மொத்த நீளம் எவ்வளவு? ..............................



11. 

இங்கு காட்டப்பட்ட உருவில் நிறம் தீட்டப்பட்ட பகுதியின் தசம தானம் 0.5 ஆக அமைய வேண்டும் எனின் மேலதிகமாக நிறம் தீட்டப்பட வேண்டிய துண்டுகள் எத்தனை?


..............................

12. 


10cm

இங்கு ஒரு பாடசாலையின் மைதானத்தின் நீளத்தினை அளவுப்பரிமாண படமாக வரைய வேண்டியுள்ளதால் 1cm என்ற அளவானது 10m ஐக் குறிக்கின்றது எனின் மைதானத்தின் உண்மையான நீளம் யாது? .

..............................

13. 

நிறம் தீட்டப்பட்ட பகுதியின் பின்னம் ..............................

14. 


1/4க்கு நிறம் தீட்டுக.

15. 1kg சீனியின் பெறுமதி 2kg உப்பின் பெறுமதிக்கு சமனாகும். 1.4 kg பருப்பு 1kg உப்பின் பெறுமதிக்கு சமனாகும். 500g சீனி ரூபா 50.00 எனின் 1kg பருப்பின் விலை யாது? ..............................

**13. பின்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.** (15 x2 = 30 புள்ளி)

1) "கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான்" இந்த உணர்வை காட்டுவது.
1) மகிழ்ச்சி 2) கவலை 3) ஆச்சரியம் 4) சாந்தம்

2. பாலில் இருந்து தயாரிக்கும் உணவு அல்லாதது.
1) வெண்ணெய் 2)பன்னீர் 3) மாஜரின் 3) யோக்கட்

3) 

பாரமான பொருள் ஒன்றை இவ்வாறு மேலே இழுக்கும் முறை
1) கப்பி முறை 2) சில்லு முறை
3) சாய்தள முறை 4) பாரம் தூக்கி முறை

4) 

உருவில் காட்டப்பட்ட பொருள் பயன்படுத்தப்படும் விளையாட்டு
1) பட்மின்ரன் 2) கொக்கி 3) எல்லே 4) றபிக்

5) தனது வாழ்நாளில் ஒரு முறை மட்டும் காய்ப்பது.
1) பனை 2) கமுகு 3) கொன்றை 4) வாழை

6) விற்றமின் C ஐ அதிகமாக கொண்ட பழம்
1) வாழைப்பழம் 2) கொய்யாப்பழம் 3) ஈச்சம்பழம் 4) புளியம்பழம்

7) மாப்பொருளை அதிகமாக் கொண்ட உணவு
1) கடலை 2)உழுந்து 3) பாண் 4) கௌபி

8) அருகில் காட்டப்பட்ட குறியீடு உணர்த்துவது



1) வட்டமாக திரும்புக 2) கவனமாக திரும்புக
3) முன்னால் வலதுபக்கமாக திரும்புக 4) இவ்வழியே திரும்ப வேண்டாம்

9) 

உருவில் காணப்படுவது
1) யாப்பகூவ 2) சிவனொளி பாத மலை
3) சிகிரியா குன்று 4) லங்கா தில்க

10) குழந்தைப் பருவத்தில் பால் குடித்து வளரும் பறவை
1) தீக்கோழி 2) நேசப் பறவை 3) காகம் 4) வௌவால்

11) பல்லி முட்டையின் நிறம்
1) மஞ்சள் 2) வெள்ளை 3) கபிலம் 4) சாம்பல்

# ஜெருசலேமில் ட்ரம்ப் பெயரில் ரயில் நிலையம்

## இஸ்ரேல் அமைச்சர் விருப்பம்



டெல்அவிவ்,டிசெ.29

ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்த ட்ரம்புக்கு நன்றிக் கடனாக, அந்நகரில் அமையவுள்ள சுரங்க ரயில் நிலையத்திற்கு அவருடைய பெயரை வைக்க இஸ்ரேல் அமைச்சர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கடந்த மாதம் அறிவிப்பை வெளியிட்டார்.

மேலும், தூதரகத்தை ஜெருசலேமுக்கு மாற்றவும் அவர் உத்தரவிட்டார். ட்ரம்ப் முடிவுக்கு உலக நாடுகள் கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தன. பலஸ்தீனத்தில் இது பெரும் கொந்தளிப்பான நிலையை ஏற்படுத்தியது.

இதனை அடுத்து, அமெரிக்காவின் இந்த முடிவை திரும்பப்பெறக்கோரி சில தினங்களுக்கு முன்னர் ஐ.நா. பொதுச்சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதனை ஆதரித்து வாக்களிக்கும் நாடுகளுக்கு நிதியுதவிகள் நிறுத்தப்படும் என்று ட்ரம்ப் வெளிப்படையாகவே மிரட்டல் விடுத்தார்.

இருப்பினும், 128 நாடுகள் இந்தத் தீர்மானத்தை ஆதரித்தன. 9 நாடுகள் மட்டுமே எதிர்த்து வாக்களித்தன. இதனால், அமெரிக்காவின் முடிவுக்கு முட்டுக்கட்டை விழுந்தது. இருப்பினும், ஐ.நாவின் தீர்மானத்தை ஏற்க முடியாது என அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் அறிவித்துள்ளன.

இந்த நிலையில், டெல்அவிவ் நகரில் இருந்து மேற்குக்கரை பகுதியில் உள்ள ஜெருசலேமுக்குப் புதிதாக சுரங்க ரயில் பாதை அமைப்பதற்கான திட்ட அறிக்கையை போக்குவரத்து அமைச்சர் கட்ஸ், அரசிடம் சமர்ப்பித்துள்ளார். ஜெருசலேம் நகரில் உள்ள யூதர்களின் புனித இடமான மேற்குச் சுவரின் அடியில் மற்றும் பழைமை நகரம் பகுதியில் ரயில் நிலையங்கள் அமைய உள்ளன.

பழைமை நகரத்தின் அடியில் அமைய உள்ளரயில் நிலையத்துக்குடொனால்ட் ட்ரம்ப் பெயரை வைக்க விருப்பப்படுகிறேன் என இஸ்ரேல் அமைச்சர் விருப்பம் தெரிவித்துள்ளார். ஜெருசலேமை தலைநகராக அங்கீகரித்துள்ளமைக்கு நன்றி கடனாக இது இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தெஹ்ரானில் நிலநடுக்கம்: ஒருவர் பலி; 50 பேர் காயம்

தெஹ்ரான்,டிசெ.29

ஈரான் நாட்டு தலைநகர் தெஹ்ரானில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் ஒருவர் பலியானார். மேலும் 50இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

ஈரான் நாட்டின் தலைநகரான தெஹ்ரானில் நேற்றுமுன்தினம் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் 4.2 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

தெஹ்ரானில் இருந்து மேற்குத் திசையில் சுமார் 51 கிலோ மீற்றர் தொலைவில் இந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

கடந்த நவம்பர் மாதம் ஈரான் - ஈராக் எல்லைப் பகுதியில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர் அத்துடன் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# சமூக வலைத்தளங்களைக் கவனமாக ஜனாதிபதி ட்ரம்ப் கையாள வேண்டும்

## முன்னாள் அதிபர் ஒபாமா சாடல்



லண்டன்,டிசெ.29

பிரிட்டன் இளவரசர் ஹரிக்கு சிறப்புப் பேட்டியளித்த அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா, மிக உயர்ந்த பொறுப்பில் உள்ளவர்கள் சமூக வலைத் தளங்களைக் கவனமாகக் கையாள வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இந்தப் பதவியை ஏற்பதற்கு முன்னரும் தற்போதும் தனது கருத்துக்களை டுவிட்டர் மூலம் அடிக்கடி பதிவிட்டு வருகிறார். சர்ச்சைக்குரிய பல கருத்துகளும் இதில் இடம்பெறுவதுண்டு.

சமீபத்தில், அமெரிக்க மக்களுக்கு டுவிட்டர் மூலம் கிறிஸ்மஸ் வாழ்த்து தெரிவித்திருந்த ட்ரம்ப், பல ஆண்டுகளாக ஒபாமா வாயில் சிக்கி சிதைந்த 'மேரி கிறிஸ்மஸ்' என்ற வார்த்தையை மீட்டதில் மகிழ்ச்சி அடைகிறேன் எனக் குறிப்பிட்டிருந்தமை, நினைவிருக்கலாம்.

இந்த நிலையில், பிரிட்டன் நாட்டின் பிரபல ஒளிபரப்பு நிறுவனமான பி.பி.சி. குழுமத்துக்குச் சொந்தமான பி.பி. சி. வானொலி 4 - அலைவரிசைக்காக பிரிட்டன் நாட்டின் வேல்ஸ் இளவரசர் ஹரி நேர்காணலாளராகச் செயற்பட்டார். ஒபாமாவின் பேட்டி நேற்று பி.பி.சி. ரேடியோ 4 - அலைவரிசையில் ஒலிபரப்பானது.

இன்றைய கௌரவ தொகுப்பாளராக பி.பி.சி.வானொலியில் நிகழ்ச்சிகளை இளவரசர் ஹரி வழங்கி வருகிறார். இதற்காக, தனது தந்தை இளவரசர் சார்லஸையும் இவர் பேட்டி கண்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஒலிபரப்பான இந்தப் பேட்டியில் ''மிக உயர்ந்த பொறுப்பில் உள்ளவர்கள் சமூக வலைத்தளங்களை பொறுப்பற்ற முறையில் கையாள கூடாது'' என ட்ரம்பின் பெயரைக் குறிப்பிடாமல் ஒபாமா அறிவுறுத்தி யுள்ளார்.

ஒரு விவகாரம் தொடர்பான பல் வேறு யதார்த்த மனநிலையில் உள்ள மக்களைத் தவறான தகவல்கள் நோக்கித் திசை திருப்பிவிடும் ஆபத்து இன்றைய யுகத்தில் உள்ளது. பல தரப்பினரின் கண்ணோட்டங்களையும், குரல்களையும் அனுமதித்து, பொதுவான கருத்துருவாக்கத்துக்கு இந்தத் தொழில்நுட்பத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் ஒபாமா வலியுறுத்தியுள்ளார்.

# நகைக்கடைகளில் வெளிநாட்டவர் வேலை செய்வதற்கு அனுமதி மறுப்பு


சவூதி அரேபியா முடிவு

ரியாத்,டிசெ.29

சவுதி அரேபியாவில் உள்ள நகைக் கடைகளில் வெளிநாட்டவர்களுக்கு வேலை கொடுக்க கூடாது என அந் நாட்டு தொழிலாளர் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியாவில் சுமார் 6 ஆயிரம் தங்கம் மற்றும் வெள்ளி நகைத் தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றில் மொத்தம் 35 ஆயிரத்திற்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்த நிலையில், இனி நகைக்கடைகளில் வெளிநாட்டவர்களைப் பணியில் சேர்க்கக்கூடாது எனத் தொழிலாளர் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சகம் முடிவெடுத்துள்ளது. உள்ளூர்மயமாக்குதலின் ஒரு பகுதியாக இந்த முடிவை எடுத்துள்ளோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவுதி அதிகாரத்தின் கீழ் 13 பிராந்தியங்கள் உள்ளன. அவற்றில் குவாசிம், டாபக், நாஜ்ரன், பாகா, அசிர், வடக்கு எல்லை மற்றும் ஜாசான் ஆகிய 7 பிராந்தியங்களில் உள்ள சவுதி மக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு நகைக்கடைகளில் பணி அமர்த்தப்படுவார்கள்.

இது தொடர்பாகத் தொழிலாளர் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் காலித் அபா அல்-காய்ல் கூறுகையில்,

நாட்டில் உள்ள கடைகளில் உள்ளூர் மக்கள் அதிக அளவில் வேலை பார்ப்பதை ஊக்குவிக்கும் நோக்கத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் ஆய்வாளர்கள் 5ஆயிரத்து 960 கடைகளில் நடத்திய ஆய்வில், 210 கடைகளில் வெளிநாட்டவர்கள் பணிபுரிகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடைகள் அரசு நிறு வனங்களின் உதவியுடன் விரைவில் உள்ளூர்மயமாக்கப்படும். என அவர் தெரிவித்துள்ளார்.

# அதிகாரம் உள்ளவர்கள் காலில் விழ வேண்டாம்

சென்னை,டிச.29

ரசிகர்கள் அதிகாரம் உள்ளவர்களில் காலில் விழ வேண்டாம். தந்தை, தாய் காலில்தான் விழவேண்டும். பெரியவர்களின் ஆசீர்வாதம் தேவைப்படும் என்பதால் அவர்கள் காலில் விழலாம் என ரசிகர்களுக்கு நடிகர் ரஜனி தெரிவித்துள்ளார்.

சென்னை கோடம்பாக்கம் ராகவேந்திராதிருமணமண்டபத்தில் 3ஆவது நாளாக நேற்று சேலம், நாமக்கல், விருதுநகர், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த தனது ரசிகர்களை நடிகர் ரஜனி சந்தித்து வருகிறார்.

அப்போது ரசிகர்களிடம் ரஜனி பேசுகையில்,



நடிகர் ரஜனி தெரிவிப்பு

நான் பெங்களூரில் இருக்கும் போது ராஜ்குமாரின் ரசிகன். கடவுள், தாய், தந்தை ஆகிய மூன்று பேரின் காலில் மட்டுமே விழ வேண்டும். உயிர் கொடுத்தவர் கடவுள். உடல் கொடுத்தவர்கள் தாய்-தந்தை. அதற்குப் பிறகு பெரியவர்கள் காலில்தான் விழ வேண்டும். வயதான பெரியவர்கள் காலில் விழுவது ஏன் என்றால், இந்த கஷ்டமான வாழ்க்கையை நடந்து கடந்து வந்தவர்கள் அவர்கள். அந்தப் பாதைகளில் நாமும் நடக்கப்போகிறோம் என்பதால், அவர்களின் கால்களில் விழுந்து ஆசி பெறலாம். ஆனால், மற்றபடி, பணம், பதவி, புகழ், அதிகாரம் உள்ளவர்கள் காலில் விழ வேண்டிய அவசியமில்லை, விழாதீர்கள் என்று ரஜனி தெரிவித்துள்ளார்.



## தினகரன் இதுவரையிலும் மக்களை சந்திக்காதமை ஏன்?

சென்னை,டிச.29

சென்னை ஆர்.கே.நகரில் நடந்த இடைத் தேர்தலில் சுயேச்சையாகக் குக்கர் சின்னத்தில் போட்டியிட்ட தினகரன் 40ஆயிரத்து 707 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இவரை எதிர்த்துப் போட்டியிட்டவர்களில் அ.தி.மு.கவுக்கு மட்டுமே கட்டுப்பணம் கிடைத்தது. வாக்களித்து வெற்றி பெறச் செய்த மக்களை இதுவரையிலும் தினகரன் நேரில் சந்திக்கவில்லை.

கடந்தமுறை ஆர்.கே. நகர் தேர்தலின் போது அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட தினகரன் பணத்தை வாரி இறைத்தார் எனக் கூறப்பட்டது, ஆனால் தேர்தல் ரத்தானது.

இந்த நிலையில் தற்போதைய தேர்தலின் போதுமத்திய அரசுகெடுபிடிகளால் பணத்தை வழங்கமுடியாமல் போனதாம்.

இதற்காகத் தான் 20 ரூபாய் ரோக்கன் சிஸ்டத்தை வழங்கினார்களாம், 20 ரூபாயைக் கொடுத்தால் 10ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கும் என வாக்காளர்களுக்கு நம்பிக்கையும் தரப்பட்டது.

ஆனால், இன்றுவரை பணம் வராததால் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது, மத்திய அரசு பல்வேறு வழிகளில் முயற்சி செய்து பணத்தைக் கொடுக்க விடாமல் தடுத்திருக்கலாம் எனவும் பேசப்படுகிறது. இதனாலேயே தினகரன் தொகுதி மக்களைச் சந்திக்காமல் இருக்கிறாராம்.

# தினகரன் ஆதரவாளர்கள் 46 பேர் அதிரடி நீக்கம்

சென்னை,டிச.29

அ.தி.மு.க.வில் இருந்து தினகரன் ஆதரவாளர்கள் 46 பேரை அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் நீக்கி எடப்பாடி பழனிச்சாமி மற்றும் ஓ.பன்னீர் செல்வம் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

அ.தி.மு.க. இணைஒருங்கிணைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடிபழனிச்சாமி, ஒருங்கிணைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர்கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பவை வருமாறு:-

அ.தி.மு.க. கொள்கை, குறிக்கோள்களுக்கும், கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயற்பட்டாலும், கழகத்தின் கண்ணியத்



ஓ.பி.எஸ் - ஈ.பி.எஸ் அறிக்கை

திற்கு மாசு ஏற்படும் வகையில் நடந்து கொண்டதாலும், கழக கட்டுப்பாட்டை மீறி கழகத்திற்கு களங்கமும், அவப்பெயரும் உண்டாக்கும் விதத்தில் செயற்பட்ட காரணத்தினாலும் அ.தி.மு.க. வில் இருந்து அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார்கள்.

கழக உடன்பிறப்புகள் யாரும் இவர்களுடன் எவ்வித் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது என கேட்டுக் கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# சசிகலா உறவினர் வீடு, நிறுவனங்களில் வருமான வரித்துறை மீண்டும் சோதனை

சென்னை,டிச.29

அ.தி.மு.க. அம்மா அணிப் பொதுச் செயலர் சசிகலாவின் உறவினர்களின் வீடுகள், அலுவலகங்கள் உட்படச் சென்னையில் 6 இடங்களில் வருமானவரித் துறை அதிகாரிகள் நேற்றுமுன்தினம் மீண்டும் சோதனையில் ஈடுபட்டனர்.

கடந்த நவம்பர் 10 ஆம் திகதி சசிகலாவின் உறவினர் வீடுகள், அலுவலகங்கள், தொழிற்சாலைகள் என தமிழகம், ஆந்திரம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் 187 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது.

இந்த நிலையில், மீண்டும் சசிகலாவின் உறவினர் வீடுகளில் திடீர் சோதனையை வருமான வரித்துறை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சசிகலா உறவினர் இளவரசியின் மருமகன் கார்த்திகேயன் இல்லம் உட்படச் சென்னையில் 6 இடங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர்.

சென்னை அடையாறு கார்த்திகேயனின் இல்லம், பள்ளிக்கரணை, தியாகராய நகர், வடபழனி ஸ்ரீசாய் கார்டன்ஸ், படப்பையில் உள்ள மிடாஸ் ஆலை உள்ளிட்ட 6 இடங்களில் இச்சோதனை நடத்தப்பட்டது. இதுதவிர கோவை அருகே மைலேரிபாளையத்தில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியிலும் சோதனை நடைபெற்றது.

போலி நிறுவனங்கள் தொடங்கப்பட்டுவரிஏய்ப்புச்செய்யப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டின் போது, கடந்த நவம்பர் மாதம் 4 நாள்கள் நடத்தப்பட்ட வருமான வரிச் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் தற்போது இந்தச் சோதனையை வருமான வரித்துறையினர் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

# தினகரனைச் சந்தித்தவர்கள் மீது கட்சித் தாவல் தடைச் சட்டமா?

சென்னை,டிச.29

ஆர்.கே நகர் தேர்தலில் தினகரன் வெற்றி பெற்றமையை அடுத்து, அவரைச் சந்தித்துள்ள இரண்டு அ.தி.மு.க எம்.பிக்கள் மீது கட்சி தாவல் தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முதல்வர்பழனிச்சாமிமுடிவெடுத்துள்ளார்.

ஆர்.கே.நகர் இடைத் தேர்லில் டி.டி.வி. தினகரன் வெற்றி பெற்றமையையடுத்து அ.தி.மு.க. எம்.பி. வேலூர் செங்குட்டுவன், எடப்பாடி பழனிச்சாமி அணியில் இருந்து மீண்டும் தினகரன் அணிக்குத் தாவியுள்ளார். அவர் தினகரன் வீட்டுக்குச் சென்று அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துவிட்டு வந்துள்ளார்.

இவர் 4 தடவைகள் அணிகள் மாறியுள்ளார். ஜெயலலிதாமறைவுக்குப் பிறகு ஆரம்பத்தில் ஓ.பன்னீர் செல்வம் அணியில் இருந்தார். அதன்பிறகு தினகரன் அணிக்குச் சென்றார். எடப்பாடிபழனிச்சாமி, ஓ.பன்னீர் செல்வம் அணிக்கு இரட்டை இலை, சின்னம் கிடைத்ததும் தினகரன் அணியில் இருந்து பிரிந்து மீண்டும் இங்கு வந்தார்.

இந்த நிலையில், ஆர்.கே. நகர்தேர்தலில் தினகரன்வெற்றி பெற்றமையுடன் மீண்டும் அவரை வீட்டுக்குச் சென்று பார்த்து செங்குட்டுவன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இவர் 4 முறை அணிகள் மாறி உள்ளமையால் இவர் மீது நடவடிக்கை எடுக்க அ.தி.மு.க. முடிவு செய்துள்ளது எனத் தெரிகிறது.



எடப்பாடி முக்கிய முடிவு

இதேபோல் புதுச்சேரி எம்.பி. கோகுலகிருஷ்ணனும் அடையாறில் உள்ள தினகரனைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்து விட்டு வந்துள்ளார். இது தொடர்பாக கோகுல்கிருஷ்ணன் தெரிவிக்கையில், ஆர்.கே.நகர் சட்டசபைத் தேர்தலில் டி.டி.வி. தினகரன் வெற்றி பெற்றமையால் வாழ்த்துத் தெரிவித்தேன் என்றார். நான் சந்தித்ததில் அரசியல் உள்நோக்கம் ஏதும் இல்லை. இரட்டை இலை, சின்னம் இருக்கும் இடத்தில்தான் என்அரசியல்பயணம்இருக்கும் என்றும் தெரிவித்தார்.

தினகரன் அணியில் இருந்த இவர் கடந்த மாதம் தான் எடப்பாடி அணிக்குத் தாவினார். மறுபடியும் மீண்டும் தினகரனைச் சந்தித்து இவர் வாழ்த்து தெரிவித்து வந்துள்ளமையால் அ.தி.மு.க. நிர்வாகிகள் இவர் மீது கடும் கோபத்தில் உள்ளனர். எனவே, இவர் மீது நடவடிக்கை எடுக்க ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

கட்சிக் கட்டுப்பாட்டை மீறி, கட்சி விரோத செயலில் 2 எம்.பிக்களும் ஈடுபட்டுள்ளமையால் இவர்கள் மீது கட்சித்தாவல் தடைச்சட்டத்தின் கீழ் பதவியைப் பறிக்க நடவடிக்கை எடுக்கப் படும் எனத் தெரிகிறது.

இதற்காக நாடாளுமன்றச் செயலாளரை அ.தி.மு.க. நிர்வாகிகள் சந்தித்து கட்சித்தாவல் தடை சட்டத்தின் கீழ் செங்குட்டுவன், கோகுலகிருஷ்ணன் ஆகிய 2 எம்.பிக்களின் பதவியை பறிக்க கடிதம் கொடுக்க உள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## நான்கு நாள் பகல் – இரவு டெஸ்ட்:

# 120 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா இன்னிங்ஸ் வெற்றி



சிம்பாப்வே அணிக்கெதிரான நான்கு நாள் பகல் - இரவு டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 120ஓட்டங்கள் வித்தியாசத்தில் இன்னிங்ஸ் வெற்றி பெற்றது.

கிரிக்கெட் வரலாற்றில் முதன்முறையாக நான்கு நாள் பகல் - இரவு டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. தென்ஆப்பிரிக்கா - ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான




இப்போட்டி தென்னாபிரிக்காவில் உள்ள போர்ட் எலிசபெத் மைதானத்தில் ஆரம்பமாகியது.

நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா கப்டன் டிவில்லியர்ஸ் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார். டீன் எல்கரும், மார்கிராமும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர். இந்த ஜோடி 72 ஓட்டங்கள் குவித்த நிலையில், எல்கர் ஆட்ட மிழந்தார். அவரைத் தொடர்ந்து இறங்கிய டி வில்லியர்ஸ், பவுமா ஆகியோர் ஓரளவு ஆடி ஓட்டங்கள் சேர்த்தனர். ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும், மார்கிராம் சிறப்பாக ஆடி சதமடித்து அசத்தினார். அவர் 125 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

டி வில்லியர்ஸ் 53 ஓட்டங்களிலும், பவுமா 44 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். இறுதியில், தென்னாபிரிக்க அணி 78.3 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 309 ஓட்டங்கள் எடுத்து டிக்ளேர் செய்தது. ஸிம்பாப்வே தரப்பில் ஜார்விஸ், மோபு ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளும், கிரீமர் 2 விக் கெட்டுகளும் விழ்த்தினர்.

இதையடுத்து, ஸிம்பாப்வே தனது முதல் இன் னிங்ஸைத் தொடங்கியது. தொடக்க ஆட்டக் காரர்களாக மச கட்சாவும், சிபாபாவும் களமிறங்கினர். ஆனால், தென்னாபிரிக்க அணியினரின் துல்லி யமான பந்து வீச்சுக்குத் தாக்குபிடிக்க முடியாமல் ஸிம்பாப்வே வீரர்கள் அடுத்தடுத்து ஆட்ட மிழந் தனர். முதல் நாள் ஆட்ட நேர முடிவில் ஸிம்பாப்வே 16 ஓவர்களுக்கு 4



விக்கெட் இழப்புக்கு 30 ஓட்டங்கள் எடுத்தி ருந்தது.

இந்த நிலையில், இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து ஆடிய ஸிம்பாப்வேக்கு அதிர்ச்சி தொடக்க மாக அமைந்தது. அந்த அணி முதல் இன்னிங்ஸில் 68 ஓட்டங்களுக்குள் முடங்கியது. ஸிம்பாப்வே அணியில் ரியான் பர்ல் 16 ஓட்டங்களும், கைல் ஜார்விஸ் 23 ஓட்டங்களும் எடுத்தனர். மற்ற வீரர் கள் ஒற்றை இலக்க ஓட்டங்களிலும், ஓட்டங்கள் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். மார்னே மார்கல் 5 விக்கெட்களும், ககிசோ ரபாடா, அண்டிலே பேலுக்வாயோ தலா 2 விக்கெட்களும், வெர்னான் பிலாண்டர் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 241 ரன்கள் பின்தங்கிய நிலையில் இருந்த ஸிம்பாப்வே பலோ ஒன் பெற்று மறுபடி களமிறங்கியது. இந்த முறையும் எதிரணியினரின் பந்துவீச்சுக்குத் தாக்குபிடிக்க முடியாமல் ஸிம் பாப்வே வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். ஆனால் இந்த முறை சற்றுத் தாக்குபிடித்து விளை யாடிய ஸிம்பாப்வே 121 ஓட்டங்கள் எடுத்து ஆட்ட மிழந்தது. இந்த முறை கிரேக் எர்வின் 23ஓட்டங் களும், கிரெம் கிரீமர் 18ஓட்டங்களும், பிரண்டன் டெய்லர் 16 ஓட்டங்களும் எடுத்தனர். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இதனால் தென்னாபிரிக்கா அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 120 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபாரமாக வெற்றி பெற்று டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது. தென்னாபிரிக்கா பந்துவீச்சில் கேஷவ் மகராஜ் 5 விக்கெட்களும், அண்டிலே பேலுக்வாயோ 3 விக் கெட்டுகளும், பிளாண்டர், ரபாடா தலா ஒரு விக் கெட்டும் வீழ்த்தினர்.

## பொக்சிங் டே டெஸ்ட்:

# அலஸ்டைர் குக் இரட்டைச் சதம் இங்கிலாந்து 491/9 என ஆதிக்கம்

மெல்போர்னில் நடைபெற்று வரும் பொக்சிங் டே டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அலஸ்டைர் குக் இரட் டைச் சதத்தால் இங்கிலாந்து 164 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்துக் கிடையிலான பொக்சிங் டே டெஸ்ட் மெல்போர்ன் மைதானத்தில் நடை பெற்று வருகிறது. இந்தப் போட்டியில் ஆஸ்திரேலியா துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. முதல் நாள் முடிவில் வோர்னர் சதத்தாலும், ஸ்மித் அரைச் சதத்தாலும் 3 விக்கெட் இழப்பிற்கு 244 ஓட்டங்கள் எடுத்தனர்.

ஆனால் 2ஆவது நாளில் இங்கி லாந்தின் அபார பந்து வீச்சால் ஆஸ் திரேலியா 327 ஓட்டங்களில் சுருண் டது. இங்கிலாந்து அணியில் பிரோட் 4 விக்கெட்டும், அண்டர்சன் 3 விக் கெட்டும் வீழ்த்தினார்கள்.

பின்னர் இங்கிலாந்து முதல் இன் னிங்ஸைத் தொடங்கியது. 2ஆவது நாள் ஆட்ட முடிவில் இங்கிலாந்து 2விக்கெட் இழப்பிற்கு 192 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அலஸ்டைர் குக் 104 ஓட்டங்களுடனும், ஜோ ரூட் 49 ஒட் டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 3ஆவது நாள் ஆட்டம்






ஆரம்பமாகியது. ஆட்டம் ஆரம்பித் ததும் ஜோ ரூட் அரைசதம் அடித்தார். தொடர்ந்து விளையாடிய அவர் 61 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். அதன்பின் வந்தவர்கள் சொற்ப ஓட் டங்களில் ஆட்டமிழந்தாலும், குக் நங் கூரம் பாய்ச்சி நின்ற மாதிரி நிலைத்து நின்று விளையாடினார்.

ஒரு கட்டத்தில் இங்கிலாந்து 8 விக்கெட் இழப்பிற்கு 373 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

9ஆவது விக்கெட்டுக்கு அலஸ் டைர் குக் உடன் புரோட் ஜோடி சேர்ந் தார். அப்போது குக் 182 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இதனால் குக் இரட் டைச்சதம் அடிப்பாரா? என்ற சந்தேகம் ஏற்பட்டது. ஆனால், முதல் மூன்று போட்டிகளில் சொதப்பிய ஸ்டூவர்ட் புரோட் அதிரடி ஆட்டத்தை வெளிப் படுத்தினார். இதனால் குக் இரட்டைச் சதத்தை நோக்கிச் சென்றார்.

128 ஆவது ஓவரை ஜேக்சன் பேர்டு வீசினார். இந்த ஓவரின் நான் காவது பந்தை பவுண்டரிக்கு விரட்டி குக் இரட்டைச் சதம் அடித்தார். குக் கிற்கு இது ஐந்தாவது இரட்டைச் சதம் ஆகும். மறுமுனையில் விளையாடிய புரோட் 59 பந்தில் அரைச்சதம் அடித் தார். தொடர்ந்து விளையாடிய அவர், 56 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார்.

கடைசி விக்கெட்டுக்கு குக் உடன் அண்டர்சன் ஜோடி சேர்ந்தார். அண் டர்சனை ஒருபக்கம் வைத்துக்கொண்டு குக் அதிரடி ஆட்டத்தை வெளிப் படுத்தினார்.

இதனால் நேற்று 3ஆவது நாள் ஆட்ட முடிவில் இங்கிலாந்து 9 விக் கெட் இழப்பிற்கு 491 ஓட்டங்கள் குவித்துள்ளது. அலஸ்டைர் குக் 244 ஓட்டங்களுடனும், அண்டர்சன் ஓட் டங்கள் ஏதும் எடுக்காமலும் களத்தில் உள்ளனர்.

தற்போது வரை இங்கிலாந்து 164 ஓட்டங்கள் முன்னிலையில் உள் ளது.

## 85 குடும்பங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நிகழ்வு கேப்பாபிலவில் நேற்றுக் காலை நடைபெற்றது.

மீள்குடியேற்ற அமைச்சின் மேலதிகச் செயலாளர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டப் பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் துஷ்யந்த ராஜகுரு, மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் சி. குணபாலன் மற்றும் படைத் தளபதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

முல்லைத்தீவு பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் துஷ்யந்த ராஜகுரு காணிகளின் உரிமைப் பத்திரத்தை மீள்குடியேற்ற அமைச்சின் மேலதிக செயலாளர் செந்தில்நந்தனனிடம் கையளித்தார். அவர் அதனை மாவட்ட செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் ஒப்படைத்தார்.

கேப்பாபிலவுப் பகுதியில் 68 குடும்பங்களுக்குச் சொந்தமான 111.5 ஏக்கர் காணிகளும், சீனியாமோட்டைப் பகுதியில் 17 குடும்பங்களுக்குச் சொந்தமான 21.84 ஏக்கர் காணிகளும் என மொத்தமாக 85 குடும்பங்களுக்குச் சொந்தமான 133.34 ஏக்கர் காணிகள் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

காணிகளைப் பெற்றுக்கொண்ட மாவட்ட செயலர், அந்தக் காணிகள் நில அளவீடு செய்து உரிய வகையில் மக்களிடம் கையளிக்கப்படும் எனவும், ஜனவரி முதலாம் திகதி வற்றாப்பளை – புதுக்குடியிருப்பு பிரதான வீதியை மறித்து அமைக்கப்பட்டுள்ள இந்த முகாமை அகற்றிப் பிரதான பாதை திறந்துவிடப்படும் எனவும், மக்களும் தமது காணிகளுக்குச் செல்லலாம் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் 64 ஆவது படை அணியின் முதலாவது படைப்பிரிவுத் தளபதி பிரிகேடியர் நிஷாந்த மானகே வரவேற்புரை நிகழ்த்தினார். மாவட்ட செயலர், மீள்குடியேற்ற அமைச்சின் மேலதிக செயலாளர் ஆகியோர் உரைகளை வழங்கினர்.

காணிகளைப் பெறுவதற்காகச் சென்ற மக்கள் இது வரை நில மீட்புப் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திய ஆறுமுகம் வேலாயுதம் பிள்ளை என்பவரைப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். ஐ-81)

## கேப்பாபிலவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வதாக் கூறி மனு ஒன்று நேற்று மீள்குடியேற்ற அமைச்சின் மேலதிக செயலாளரிடம் ஒப் படைக்கப்பட்டதால் அங்கு பெரும் குழப்பம் ஏற்பட்டது.

– இவ்வாறு மாற்றுக் காணிகள் கோரி மனு கையளிக்கப்பட்ட விடயம் நிகழ்வு முடிந்ததும் காட்டுத் தீ போலப் பரவியது. இதனை அறிந்துகொண்ட கேப்பாபிலவுக் காணிகளின் உரிமையாளர்கள் கடும் ஆத்திரம் அடைந்தனர்.

நில மீட்புப் போராட்டம் நடக்கும் இடத்துக்கு வந்த அவர்கள் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன், அந்த மனுவைக் கையளித்த நபரின் வீட்டை முற்றுகையிட்டனர். ஆயினும் அவர் அங்கு இருக்கவில்லை. இதனால் அங்கிருந்தோரை எச்சரித்துவிட்டு அவர்கள் மீண்டும் போராட்ட இடத்துக்கு வந்தனர்.

காணிகள் அனைத்தும் முற்றாக மீட்கப்படும்வரை போராட்டம் தொடரும் என அவர்கள் உறுதியாகக் கூறினர். (ஐ-81)

## தாங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அமைக்கப்பட்டிருந்த 29 வீடுகளும் அந்தக் காணிகளுக்கு உரிய மக்களிடமே கையளிக்கப்படும் எனப் படையினர் தெரிவித்தனர்.

கேப்பாபிலவில் 85 குடும்பங்களுக்குச் சொந்தமான 133.4 ஏக்கர் காணிகள் நேற்றுப் படையினரால் விடுவிக்கப்பட்டன.

இந்தக் காணிகளுக்குள் தாம் வரும்போது மக்களின் 8 வீடுகள் காணப்பட்டதாகவும், அவை சிறந்த முறையில் புனரமைக்கப்பட்டு தற்போது மக்களுக்கு வழங்கப்படுவதாகவும் தெரிவித்த படையினர், இந்தக் காணிகளுக்குள் தம்மால் புதிதாக அமைக்கப்பட்ட 29 வீடுகளையும் மக்களுக்கே வழங்குவதாகவும் நேற்றுக் குறிப்பிட்டனர்.

அந்த வீடுகள் மாபிள்கள் பதிக்கப்பட்டு நல்ல முறையில் இருந்தமையை அவதானிக்க முடிந்தது. அத்துடன் மக்களின் பழைய வீடுகளும் மாபிள்கள் பதிக்கப்பட்டு அழகாக்கப்பட்டுள்ளன. (ஐ-81)

## விலகினார்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இது

தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

அரசமைப்புச் சபையின் உறுப்பினராக, முன்னாள் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும் நியமித்திருந்தனர்.

நீதியமைச்சர் பதவியில் இருந்து விலகிய பின்னர் விஜேதாஸ ராஜபக்ஷ, அரசமைப்புச் சபையின் நியமனம், அரசமைப்புக்கு விரோதமானது என்று கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கூட்டணிக்குள்ளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சுரேஷ் பிறேமச்சந்திரன் இடையே வேட்பாளர் தெரிவு உட்படப் பல விடயங்களில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனந்தசங்கரியால் வழங்கப்பட்ட வேட்பாளர்களை சுரேஷ் பிறேமச்சந்திரன் புறந்தள்ளி விட்டார் என்றும், இதனையடுத்து ஆனந்தசங்கரிக்கும் சுரேஷுக்கும் இடையே கடும் முறுகல் நிலை எழுந்துள்ளதாவும் கூறப்படுகின்றது.

இந்த முறுகல் முற்றிய நிலையில் ஆனந்தசங்கரி நேற்று முன் தினம் அறிக்கை ஒன்றை வெளியிடவிருந்தார் என்றும், ஆயினும் பின்னர் அது சிலரால் தடுத்து நிறுத்தப்பட்டது என்றும் தெரியவருகின்றது. (ஐ)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இருந்து கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் விளக்க மறியலில் உள்ளனர்.

இவர்களில் 69 பேரை விடுவிக்கச் சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்தல் வழங்கியிருந்தது.

இதனையடுத்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால் 44 பேரும், மன்னார் நீதிமன்றில் 17 பேரும் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, பருத்தித்துறை நீதிமன்றத்தால் 8 மீனவர்கள் விடுவிக்கப்படவிருந்த நிலையில் கடிதம் கையளிக்காத காரணத்தால் அவர்கள் விடுவிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## யாழ்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தேசிய ரீதியில் சாதனை படைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியாகிய பெறுபேறுகளின்படி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி ஆகிய 3 பாடசாலைகளின் மாணவர்களே தேசிய ரீதியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுச் சாதனை நிலை நாட்டினர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் சிறீதரன் துவாரகன் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் 3 ஏ சித்திகளுடன் தேசிய ரீதியில் முதலாம் இடத்தையும், சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் டெய்சியஸ் ஜெயராஜன் போல் ஜான்சன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

வேம்படி மகளிர் கல்லூரி மாணவி கமலேஸ்வரி செந்தில் நாதன் உயிரியில் முறைமைத் தொழில்நுட்பப் பிரிவில் மூன்றாம் இடத்தைப் பெற்றார்.

இதேவேளை, கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரி மாணவன் பி.எச். சோமரட்ண பௌதிக விஞ்ஞானப் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்றார்.

உயிரியல் விஞ்ஞானப் பிரிவு மற்றும் வணிகப் பிரிவு ஆகியவற்றில் முதலிடங்களை மாத்தறை சுஜாதா வித்தியாலய மாணவிகள் இருவர் பெற்றுள்ளனர்.

உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் திலினி சந்துனிகா என்ற மாணவியும், வணிகப் பிரிவில் துலானி ரசந்திகா தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பிடித்தனர். (ஐ-7)

## யாழ்.குடும்பத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பத் தலைவருக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றால் வழங்கப்பட்ட பிடியாணை உத்தரவுக்கு அமைய அவரைக் கைது செய்யச் சென்ற போதே இந்த விடயம் தெரிய வந்ததாகத் தமிழகப் பொலிஸார் கூறினர்.

தமிழகப் பொலிஸார் தெரிவிக்கையில் –

2015ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கதிர்வேல் தயாபரராஜ், அவரது மனைவி உதயகலா மற்றும் இரண்டு குழந்தைகள் இலங்கைப் படகு மூலம் தனுஷ்கோடிக்கு வந்தனர். அவர்களை சட்ட விரோதமாகக் கடவுச்சீட்டு இன்றி வந்தனர் என வழக்குப் பதிவு செய்யப்பட்டு மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப் பட்டனர்.

கதிர்வேல் தயாபரராஜுக்கு எதிராக மோசடி மற்றும் பணம் கையாடல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு யாழ்ப்பாணம், சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு இடம் பெறுகிறது.

இந்த நிலையிலேயே அவர் தலைமறைவாகித் தமிழகம் வந்துள்ளார். சாவகச்சேரி நீதிமன்றால் அவருக்குப் பிடியாணைக்கான கடிதம் இந்தியத் தூதரக அலுவலகம் மூலம் மண்டபம் பொலிஸாருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தத் தகவல் அறிந்து கதிர்வேல் தயாபரராஜ் மண்டபம் முகாமிலிருந்து தலைமறைவாகியுள்ளார். அவரை மண்டபம் பொலிஸார் தேடிவருகின்றனர். – என்றனர். (ஐ)

## வடக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆளுநர் றெஜினோல்ட் குரே.

எழுவைதீவுக்கும் அனலைதீவுக்கும் இடையிலான பயணிகள் படகுச் சேவையை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

"தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் பொலிஸ் அலுவலர்களை ஏன் நம்புவதில்லை என்பதை நாம் கண்டறிய வேண்டும்." – என்றும் ஆளுநர் அங்கு கூறினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெரிவித்தார் புளொட் தலைவரும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன்.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் முல்லைத்தீவு வேட்பாளர்களை நேற்று சித்தார்த்தன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்று முற்பகல் 11.00 மணியளவில் முள்ளியவளை புளொட் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடந்தது. இதில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன் மற்றும் வேட்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களில் கருத்து வெளியிடும்போதே சித்தார்த்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

இந்தத் தேர்தல் ஒரு சாதாரண உள்ளூராட்சித் தேர்தலாக இல்லாமல் தேசிய மட்டத்தில் மிக முக்கிய மான தேர்தலாக மாற்றப்பட்டுள்ளது.

இதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஒன்று தெற்கிலே உள்ள கட்சிகள் தங்களின் பலத்தை நிரூபிப்பதன் மூலம் இப்போது உள்ள அரசு, தொடர்ந்து தான் தார்மீக அரசாக இருக்கலாம் என்பதை நிரூபிப்பதற்கு அரச கட்சிகள் முயற்சி செய்கின்றன. அதேபோல் மஹிந்தவின் கட்சி, தாங்கள் வெல்வதன் மூலம் சாத்வீக ரீதியாக தாங்கள் பலம் பொருந்தியவர்கள் என்று காட்டுவதற்கு முனைகின்ற அதேவேளை, வடக்கு – கிழக்குப் பகுதிகளிலும் மக்களின் ஆதரவைச் சோதிக்கக்கூடிய ஒரு தேர்தலாக மாற்றம் பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தமட்டில் அது இன்று தமிழ் மக்களின் பெரும்பான்மைப் பலத்தை வைத்து அரசுடனும் சர்வதேச ரீதியிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளில், புதிய அரசமைப்பு உருவாக்கம் போன்ற பேச்சுக்களில் பங்குபற்றுகின்றது.

இந்தத் தேர்தலில் கூட்டமைப்பின் நடவடிக்கைகளை விமர்சித்து மாற்றுக் கட்சிகள் பல தேர்தலில் குதித்துள்ளன.

இந்தத் தேர்தலில் கூட்டமைப்பு பலவீனப்படுத் தப்படுமானால் அது தமிழ் மக்களின் பிரச்சினைகளில் பின்னடைவை ஏற்படுத்தும் காரணியாக அமைந்துவிடும்.

தென்னிலங்கை அரசியல்வாதிகளைப் பொறுத்தமட்டில், கூட்டமைப்பு பலவீனப்படுமானால் அதனுடன் பேசவேண்டிய தேவை இல்லை என்ற ஒரு கருத்தை முன்வைத்து அரசமைப்பு நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும்.

இந்த அரசமைப்பு நடவடிக்கைகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய ஒரு நியாயமான தீர்வைக் கொண்டு வரும் என்று நான் கூறவில்லை.

இருந்தாலும் இந்த நடவடிக்கைகளில் இருந்து நாமாகவே ஒதுங்கினால் அல்லது கூட்டமைப்பு பலவீனப்படுத்தப்பட்டதால் ஒதுக்கப்படுகின்ற ஒரு நிலையோ உருவானால் மீண்டும் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு மீக நீண்ட காலம் எடுக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் பலம் பொருந்திய அமைப்பு. தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பேசுவதற்கு இங்கு அவர்கள் தான் இருக்கின்றார்கள் என்ற நிலையை தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும். இதனை உறுதிப் படுத்தத் தவறினால் நாங்கள் உதிரிகளாகப் பல கட்சிகளாக பிரிந்து போக நேரிடும். அரசுக்கு இது இலகுவாக இருக்கும்.

எனவே தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதை ஒரு முக்கிய கடமையாக நான் பார்க்கின்றேன். அதை அவர்கள் செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். – என்றார். (ஐ-81)

## என்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) துள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சித் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வு நேற்று ஜனாதிபதி தலைமையில் இடம் பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

என்னுடைய வாளுக்கு வெட்டுப்படுவது எனது குடும்ப உறவினர்களா? நண்பர்களா? எனக்கு நெருக்கமானவர்களா? யார் என்பது எனக்குத் தெரியாது. யாரானாலும் வெட்டுப்பட்டுச் செல்வார்கள் என பகவத் கீதையில் கூறப்படுகின்றது.

அதேபோன்றுதான், தூய்மையான அரசியல் கலாசாரமொன்றை நாட்டுக்குக் கொடுப்பதற்கு என்னுடைய வாளுக்கு யார் வெட்டுப்படுவார்கள் என்பதை என்னால் கூற முடியாது. – என்றார். (ஐ)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) களை மீறியமை தொடர்பில் 29 முறைப்பாடுகளும், தேர்தலுடன் தொடர்புடைய சிறிய குற்றச்செயல்கள் குறித்து 13 முறைப்பாடுகளும் நேற்றுக் காலை 6 மணிவரை கிடைத்துள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இவற்றில் சுவரொட்டிகளைச் சட்டவிரோதமாக ஒட்டியமை, வீடுகளுக்கு கற்பிரயோகம் மேற்கொண்டு பொருள்களுக்குச் சேதம் விளைவித்தமை, நபர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை, நபர்களை அடித்துக் காயம் ஏற்படுத்தியமை, பதாகைகளுக்குச் சேதம் விளைவித்தமை, வாக்காளர்களுக்குப் பொருள்களைப் பகிர்ந்தளித்தமை போன்ற குற்றங்கள் உள்ளடங்குவதாக அறிவித்த பொலிஸார், கைதுசெய்யப்பட்டோருக்கு எதிராக நீதிமன்றின் ஊடாக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் கூறினர் .(ஐ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதனால் மஹிந்த தரப்புக்குப் பெரும் தலையிடி ஏற்படவிருக்கின்றது என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட 17 விசாரணைகள் தொடர்பான அறிக்கை இதன்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட உள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையும் இதன்போது சமர்ப்பிக்கப்படவுள்ளது.

குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆயுள்காலம் கடந்த நவம்பர் மாதம் 3ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில், அறிக்கையை தயார்ப்படுத்துவதற்காக ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது. அதற்கமைய ஆணைக் குழுவின் அனைத்து அறிக்கைகளும் தயார்படுத்தப்பட்டுள்ளதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்கு முன்னரும் கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்றிருந்த 17 விசாரணைகள் தொடர்பான அறிக்கை ஜனாதிபதியிடம் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ் மக்களுக்காக விக்கியை விடவும் நான் அதிகம் குரல் கொடுத்துள்ளேன்

## இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா கூறுகிறார்



வடக்கு முதலமைச்சர், இன்று அமர்ந்திருக்கும் முதலமைச்சர் கதிரைக்குரிய மாகாண சபையை பெற்றுக்கொள்வதற்காக நாங்கள் பெரிய போராட்டங்களை முன்னெடுத்தோம்.

தமிழ் மக்களுக்காக விக்னேஸ்வரனை விட நான் அதிகம் குரல் கொடுத்துள்ளேன் என்பதை சம்பந்தனை கேட்டால் கூறுவார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் அரசில் இருந்து கொண்டு நான் யுத்த விரோத போராட்டத்தில் கலந்து கொண்டேன். ஆனால் அவ்வாறான போராட்டங்களில் நான் விக்னேஸ்வரனைக் காணவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தரவுகள் இல்லாமல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தன்னை விமர்சிப்பதாக வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளமை குறித்து விவரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாண சபையின் செலவு விவரங்களை வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் எனக்கு அனுப்பினார் எனக் கூறியிருக்கின்றார். ஆனால் அவ்வாறு எதுவும் எனக்கு கிடைக்கவில்லை. அவர் அனுப்பியிருக்கமாட்டார் என்று கருதுகின்றேன். காரணம் அவ்வாறு அனுப்பினால் நான் கூறியமை உண்மையாகிவிடும் என்று அவருக்குத் தெரியும்.

இதேவேளை, மத்திய அரசில் அனுப்பப்படும் நிதியை வடக்கு மாகாணசபை உரிய முறையில் செலவழிக்கவில்லை என்று இப்போதும் நான் கூறுகின்றேன்.

மேலும், நான் தமிழ் மக்களுக்காக எவ்வாறு குரல் கொடுக்கின்றேன் என்று நாட்டு மக்களுக்குத் தெரியும். குறிப்பாக நான் உலக நாடுகள் மத்தியில் இலங்கைத் தமிழ் மக்களுக்காக எவ்வாறு குரல் கொடுத்தேன் என்று எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தனுக்கு நன்றாகவே தெரியும்.

தமிழ் மக்களுக்காக அதிகளவில் குரல் கொடுப்பது விக்னேஸ்வரனா அல்லது டிலான் பெரேராவா என்று கேட்டால் டிலான் பெரேரா என்றுதான் தமிழ் மக்கள் கூறுவார்கள். எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனும் அதனைக் கூறுவார்.

வடக்கு முதலமைச்சர் இன்று அமர்ந்திருக்கும் முதலமைச்சர் கதிரைக்குரிய மாகாணசபையை பெற்றுக்கொள்வதற்காக நாங்கள் பெரிய போராட்டங்களை முன்னெடுத்தவர்கள். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 10 நாள்களைக் கடந்தும் தொடருகிறது லெமன்மோரா மக்களின் போராட்டம்!





கொழும்பு, டிசெ. 29

தோட்ட நிர்வாகம் தங்களுக்கு வழங்க வேண்டிய அடிப்படை உரிமைகள் மற்றும் சலுகைகளை வழங்கவேண்டும்எனத்தெரிவித்து கடந்த 18 ஆம் திகதி முதல் லெமன்மோரா மக்கள் தொடர் போராட்டத்தை மேற் கொண்டு வருகின்றனர்.

ஆரம்பத்தில் 188 ஏக்கர் நிலப் பரப்பில் தேயிலை பயிரிடப் பட்டிருந்தபோதிலும் தோட்ட நிர்வாகம் திட்டமிட்டு அந்தத் தோட்டத்தைக் காடாக்கி வருகிறது எனக் குற்றம் சுமத்தியுள்ள அந்த மக்கள், தற்போது 20 ஏக்கர் நிலத் திலேயே தேயிலை காணப்படு கிறது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில், தற்போது அங்கு மாட்டுப்பண்ணை ஒன்றை அமைக்க தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும்அதில்வெளியிடங்களைச் சேர்ந்தோரே பணிக்கு அமர்த்தப் பட்டுள்ளனர் என்றும் மக்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

அத்துடன், தங்களுக்கு முறையாக ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியைச் செலுத்த வேண்டும், முறையாக வேலை வழங்கப்பட வேண்டும், வீடமைப்புத்திட்டத்திற்குக்காணிகள்வழங்கவேண்டும், உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்துள்ள மக்கள், தோட்ட நிர்வாகம் தங்களுடன் பேச்சு நடத்த முன்வர வேண்டும் என வலியுறுத்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தனியாருக்குச் சொந்தமான இந்தத் தோட்டத்தில் 32 குடும் பங்களைச் சேர்ந்த சுமார் 200 பேர் வசித்து வருகின்றனர் என் பது குறிப்பிடத்தக்கது.

(க)

# தேர்தல் கண்காணிப்புக்காக 7 ஆயிரம் பேர் களத்தில்!

தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக 7 ஆயிரம் பேரை அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பின் தலைவரான ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

பெப்ரவரி மாதம் 10ஆ ம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காகத் தேசிய கண்காணிப்பாளர்களுடன் சர்வதேச கண்காணிப்பாளர்களும் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டாலும், நிதி பற்றாக்குறை காரணமாக இம்முறை சர்வதேச கண்காணிப்பாளர்கள் அழைக்கப்படமாட்டார்கள் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவால் தற்போது தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே, ரோஹண ஹெட்டியாராச்சி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் பல உள்ளமையால், இத் தேர்தலை கண்காணிப்பதற்காக சர்வதேச கண்காணிப்பாளர்கள் அவசியமில்லை என்பது தான் எமது கருத்தாக இருக்கிறது.

அத்தோடு, தேசிய தேர்தலன்றி சிறிய தேர்தலொன்றே தற்போது நடைபெறவுள்ளமையாலும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் தேவைப்படமாட்டார்கள்.

இதற்காக நாம் தற்போதே ஆயத்த நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டோம். அந்த வகையில், நாடளாவிய ரீதியில் 7 ஆயிரம் கண்காணிப்பாளர்களை அமர்த்துவதற்கு எம்மால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# திறைசேரியின் கண்காணிப்பில் அரிசி இறக்குமதி!

கொழும்பு, டிசெ. 29

திறைசேரி மூலமான நடவடிக்கைகள் மற்றும் கண்காணிப்பின் கீழ் அரிசியை இறக்குமதி செய்வதற்கான பங்களிப்புத் தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது.

இதேபோன்று அரிசியை இறக்குமதி செய்வதற்காக எத்தகைய தனியார் நிறுவனங்களுக்கும் சதொச நிறுவனங்களுக்கும் வசதிகளை செய்துகொடுக்க அரசு எதிர்பார்த்துள்ளது.

அத்தியாவசிய உற்பத்திப் பொருள்களை போதியளவு சந்தைக்கு விநியோகிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.












இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.